# செயலாற்றுகை அறிக்கை - 2019

**வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

**இரண்டாம் மாடி,**

**“செத்சிறிபாய”, பத்தரமுல்லை.**

## அத்தியாயம்


அத்தியாயம 1 பக்க

எண்

| | | |
|---|---|---|
| 1.1 | அறிமுகம் | 02 |
| 1.2 | அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி | 03 |
| 1.3 | அமைச்சின் கீழுள்ள பிரதான விடயப்பரப்புக்கள் | 04 |
| 1.4 | அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு மற்றும் மனிதவளத் தோற்றப்பாடு | 05 |
| 1.5 | அமைச்சின் கீழுள்ள பிரதான பிரிவுகள் மற்றும் விடயப்பரப்புக்கள் | 06-10 |
| 1.6 | அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் | 11-14 |
| 1.7 | வெளிநாட்டு உதவிகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் | 15 |

| | | |
|---|---|---|
| அத்தியாயம் 2 - | 2019 முன்னேற்றம் மற்றும் 2020 எதிர்கால நோக்கு (பிரிவு அடிப்படையில்) | 16-26 |
| அத்தியாயம் 3 - | நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று | 27-34 |
| அத்தியாயம் 4 - | செயலாற்றுகைச் சுட்டிடகள் | 35 |
| அத்தியாயம் 5 - | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDG) நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை | 36 |
| அத்தியாயம் 6 - | மனித வளத் தோற்றப்பாடுகள் | 37-39 |
| அத்தியாயம் 7 - | இணக்கப்பாட்டு அறிக்கை | 40-46 |

## 1.1 அறிமுகம்

2019 ஆம் ஆண்டு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ஒட்டுமொத்த ஏற்பாடுகள் ரூ.மி. 11389 ஆகும். இதில் ரூ.மி. 10946 மூலதன பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ஆண்டினுள் நிலவிய அரசியல் சீரற்ற நிலைக்கு மத்தியில் அமைச்சின் நிதிசார் முன்னேற்றத்தை 85% ஆன மட்டத்தில் பேணிவர முடிந்துள்ளமை அமைச்சு என்ற வகையில் நாம் பெற்ற வெற்றியாகும்.

தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது 905 மாதிரிக் கிராமங்கள் ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டு ஆண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக வேலைகள் இடம்பெறுகின்ற கிராமங்களின் எண்ணிக்கையை 1415 மாற்றிக் கொள்ள முடிந்தது.

வறிய குடும்பங்களுக்கு உதவி அடிப்படையிலும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு சலுகை கடன் அடிப்படையிலும் நிதி உதவி மற்றும் தொழில்நுட்ப உதவிகளையும் செய்துகொடுத்து அமுல்படுத்தப்பட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பல்வேறு இனத்தவரின் தேவைகளுக்கு அமைய தொடர்ந்தும் நல்லமுறையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஒரு வீட்டை நிர்மாணிக்க காணித் துண்டொன்று இல்லாத சமுதாயத்தினருக்கு மாதிரிக் கிராமமொன்றில் ஒரு காணித் துண்டுடன் ஒரு வீட்டின் உரிமையை உறுதி செய்து கொடுப்பதுடன் காணித் துண்டின் உரித்தைக் கொண்டுள்ளவர்களுக்கு விசிறி கடன் மற்றும் உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் பல 2019 ஆம் ஆண்டிலும் அமுல்படுத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை மதிப்பீடு செய்த இந்திய அரசு மேலும் ரூ.மி. 600 ஐ தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக மாதிரிக் கிராமம் வேலைத்திட்டத்திற்குப் பெற்றுத் தந்தமை ஆண்டினுள் நாம் பெற்ற மற்றொரு வெற்றியாகும்.

நிர்மாணத்துறையில் பயிற்றப்பட்ட ஊழியப் பற்றாக்குறைக்கான தீர்வை செய்துகொடுத்து "சில்ப சவிய" தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்திய ஆண்டு என்ற வகையிலும் 2019 ஆம் ஆண்டு முக்கியத்துவம் பெறுகின்றது. மேலும் நிர்மாணத்துறையை மேம்படுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு ஆண்டு என்ற வகையிலும் 2019 முக்கியத்துவம் பெறுகின்றது. நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக பல்வேறு துறைகளிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டு பெறுபேறுகளை அடைந்துகொள்ள முடிந்ததன் மூலமும் இந்த ஆண்டு முக்கியத்துவம்மிக்கதாக அமைந்துள்ளது.

## 1.2 அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணி (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

### நோக்கு

நிலைபேறான குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கைத்தொழிலில் புத்தெழுச்சி

### செயற்பணி

இலங்கைத் தொழில்முயற்சியாளர்கள், தொழில் வல்லுனர்கள், ஊழியப் படையணியினரை ஆற்றல்கள் மற்றும் வளங்களின் மூலம் பலமூட்டி, திட்டமிட்டு சுற்றாடலுக்குச் சாதகமான மற்றும் தரமான நிரம்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்தல் மற்றும் சமுதாயத்தின் பங்கேட்புடனான அடிப்படை வசதிகளைக் கொணடுள்ள குடியிருப்புகளை உருவாக்கல், குறைந்த வருமானம் பெறும் மக்களை பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரதீயாக வலுவூட்டுவதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்”

### வீடமைபப் மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் விடயபப்ரப்பு மற்றும் பிரதான விடயப்பரப்புக்கள

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான கொள்கைகள், அபிவிருத்தித் திட்டஙக்ளைத் தயாா் செய்தல் மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ள உரிய நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுத்தல்.

## 1.3 அமைச்சின் கீழுள்ள பிரதான விடயப்பரப்புக்கள் (வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு)

### வீடமைப்புப் பிரிவு

1. குறைந்த வருமானம் பெறுகின்ற மற்றும் விசேட சமுதாயக் குழுக்கள் உட்பட மக்களின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் வீடமைப்பு நிதி உதவி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
2. வீடமைப்பு அபிவிருத்தித் தேவைகளுக்கு காணி கொள்ளல், சாட்டுதல் செய்துகொள்ளல் மற்றும் நீக்கம் செய்வது தொடர்பிலான நடவடிக்கைகள்
3. வீடமைப்பு பாடம் தொடர்பிலான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயார் செய்தல், பின்னாய்வு மற்றும் மதிப்பீடு.


### தொழில்நுட்ப பிரிவு

1. நிர்மாண விடயம் தொடர்பிலான கொள்கைகள், சட்டங்கள், விதிகளை தயார் செய்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்.
2. நிர்மாணக் கைத்தொழிலைப் பேணிவருவதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுத்தல்.
3. அமைச்சின் கீழுள்ள அரசாங்க திணைக்களங்கள், நிர்மாணத்துறை சம்பந்தமான அதிகாரசபைகளின் நடவடிக்கைகளை ஒழுங்குறுத்தல் மற்றும் வழிகாட்டல்.

### நிர்மாணப் பிரிவு

1. அமைச்சின் கீழுள்ள நிர்மாணத்துறை சம்பந்தமான நிறுவனங்களை ஒழுங்கிணைப்புச் செய்தல் மற்றும் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல்.
2. அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பம்சாரா நிறுவனங்களுக்கு நிர்மாண நடவடிக்கைகளின் போது தொழில்நுட்ப வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

## 1.4 அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு மற்றும் மனிதவளத் தோற்றப்பாடு (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறைப் பிரிவு)




பிரதிப் பணிப்பாளர். பி.ப.   உதவிப் பணிப்பாளர் - உ.பணி.   கணக்காளர் - கண.   சட்ட அலுவலர் - சட்.அலு.
கனிய அளவையாளர் - கனி.அள.   நிருவாக அலுவலர் - நி.அலு.   தகவல் தொழில்நுட்ப அலுவலர் - த.தொழி.அ.   அபிவிருத்தி அலுவலர் - அபி.அலு.
அரச முகாமைத்துவ உதவியாளர் - அ.முகா.உ.   அலுவலக சிற்றூழியர் - அலு. சிற்.

# 1.5 அமைச்சின் கீழுள்ள பிரதான பிரிவுகள் மற்றும் விடயப்பரப்புக்கள் (வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு)

## 1.5.1 நிருவாகப் பிரிவு

வட ீ மைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் அரசாங்கக் கொள்கைகளை அமுல்படுத்தும் போதும் பொது நலன்புரிக்காக மேற்கொளள் ப்படுகின்ற பல்வேறு பணிகளின் போதும் அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் ஒத்துழைப்பினை வழங்கி அதற்குத் தேவையான வேலைச் சூழலை ஒழுங்குசெய்து கொடுத்தல் மனித வளம் மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனுடனும், உற்பத்தித் திறனுடனும் முகாமைத்துவம் செய்வது நிர்வாகப் பிரிவினால் மேற்கொளள்ப்படுகிறது. நிருவாக பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சில் சேவையாற்றுகின்ற சகல அலுவலர்களினதும் தாபான நடவடிக்கககளை பேணி வருதல்.
2. அமைச்சின் வழங்கல் நடவடிகள் ககளை நிறைவேற்றல்.
3. அமைச்சின் சகல பராமரிப்பு நடவடிகக்ககளையும் மேற்கொளள்ல்.
4. அமைச்சு மற்றும் இணைந்த நிறுவனங்களில் அமைச்சின் தலையீட்டின் ஊடாக மேற்கொளள் ப்படுகின்ற சகல நிருவாக நடவடிகக்ககளும்.
5. அமைச்சின் பதவியணி சம்பந்தமான நடவடிகக்ககள்.
6. அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
7. அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்.
8. உற்பத்தித் திறன் செயற்பாடுகளை மேற்கொளள்ல்.
9. அமைச்சின் நடவடிகள் ககளுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
10. அமைச்சின் அலுவலர்களுக்கான பயிற்சித் தொடர்களை நடாத்தல்.
11. அமைச்சின் இணை நிறுவனங்களின் செயலாற்றுகை அறிக்கைகள் தொடர்பிலான நடவடிகக்ககள்

## 1.5.2 திட்டமிடல் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் அபிவிருத்தி நிகழ்சச் ித் திட்டங்களை திட்டமிடல் மற்றும் திட்டமிடப்பட்டவாறு முனே னற்றத்தை அடைந்துகொள்வதற்கு வழிநடாத்துவது இப்பிரிவின் பிரதான செயற்பணியாகும்.

வட ீ மைப்பு மற்றும் நிர்மாணத்துறையில் மேற்கொளள் ப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் உரிய தரப்பினர்கள மற்றும் பொதுமக்களை அறிவுறுத்துவதும் இதில் உள்ளடங்கும்.

மேலும், வட ீ மைப்பு மற்றும் நிர்மாணத் துறையின் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு நிறுவனங்களினால் தயார் செய்யப்படுகின்ற கருத்திட்டப் பிரேரணைகளை நிதி அமைச்சினூடாக அங்கீகரித்துகெ காள்ள உதவுவதும், அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்சசித்திட்டங்களை பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதும் திட்டமிடல் பிரிவினால் மேற்கொளள்ப்படுகின்றன.

### திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சின் நோக்கு மற்றும் நோகக் ங்களுக்கு ஏற்புடையதாக அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள

நிறுவனங்களின் செயல் ரதீ ியான திட்டத்தைத் தயார் செய்வது அமைச்சின் ஒழுங்கமைப்பு (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை
பிரிவு)
செயலாற்றுகை அறிக்கை – 2018 (வடீமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு)
தொடர்பில் உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்சசித் திட்டங்களின் முனனேற்றத்தை மாதாந்த மற்றும் வருடாந்த செயற்றிட்டத்திற்கமைய மதிப்பீடு செய்தல்.

3. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான தகவல்களைத் தயார் செய்வதும், அறிக்கையிடுவதும்.

4. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கருத்திட்டப் பிரேரணைகளை, தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பதும் ஒருங்கிணைப்புச் செய்வதும்.

5. கருத்திட்டங்களை பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

6. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் சம்பந்தமான அமைச்சரவை தீர்மானங்களை அமுல்படுத்துவது பற்றிய பின்னாய்வை மேற்கொளள்ல்.

7. அமைச்சின் வருடாந்த முனவே னற்ற அறிக்கை, செயலாற்றுகை அறிக்கையைத் தயார் செய்தல்.

8. முனவே னற்ற மீளாய்வுக் கூட்டங்களை ஒழுங்குசெய்தல் மற்றும் பின்னாய்வு செய்தல்.

## 1.5.3. வீடமைப்புப் பிரிவு

வட ீ மைப்புத் துறையின் நோகக் ங்களை அடைந்துகொள்வதற்காக வட ீ மைப்பு அபிவிருத்தி துறையின் கீழ் தேசிய திட்டங்களை திட்டமிடல், திட்டங்களைத் தயார் செய்தல், வழிநடாத்தல், பின்னாய்வு, மற்றும் அத்துறையில் ஈடுபட்டுள்ள அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்டல
. இப்பிரிவினால் மேற்கொளள்ப்படுகின்றது.

## வீடமைப்புப் பிரிவின் பிரதான பணிகள்

**1. கொள்கைகளை வகுத்தல்**

- வட ீ மைப்புத் துறையின் முனவே னற்றத்துகக் த் தேவையான கொள்கைகளைத் தயார் செய்தல்.
- வட ீ மைப்புத் துறை சம்பந்தமான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் குறிப்புக்களைத் தயார் செய்தல
- வட ீ மைப்புத் துறை சம்பந்தமான சட்டங்களைத் திருத்தியமைத்தல்.
- வட ீ மைப்புத் துறைக்கு ஏற்புடையதான கொள்கைகளை ஏனைய அரசதுறை நிறுவனங்களுடன் இணைந்து அமுல்படுத்தல்.

**2. காணிகள் பற்றிய கடமைகள்**

- வடீமைப்பு அபிவிருத்தி நோகக்ங்களுக்கு காணிகளைச ் சுவீகரித்தல்.்.
பொறுப்பேற்றுக் கொள்வது சம்பந்தமான நடவடிகக்கைள்.
- வடீமைப்பு அபிவிருத்தித் தேவைகளுக்கு காணிகளை நீக்கம் செய்வது சம்பந்தமான நடவடிகக்கைள்
- தேசிய வட ீ மைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 8(1) பிரிவின் கீழ் காணிகள்.். வடீகளுக்கான சட்ட ரதீயான உரித்தினை பொதுமக்களிடம் கையளித்தல்.

**3. வீடமைப்பு அபிவிருத்தி**

- நாட்டின் வட ீ மைப்புத் தேவைக்குப் பொருத்தமானவாறு வட ீ மைப்பு நிர்மாணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வடீமைப்புக் கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- தொடர்மாடி வட ீ மைப்புத் திட்டங்களை மறுசரீமைத்தல்.
- வீடமைப்புக் கடன் உதவி நிகழ்சசித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பங்கேடப்பு முறையியலின் கீழ் வடீமைப்பு

**4. வேறு கடமைகள்**

- மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய வடீமைப்புக் குழுக்களைத் தாபித்தல்.

- உலகக் குடியிருப்புத் தினத்தை முனன் ிட்டு நாடு முழுவதிலும்

## 1.5.4 தொழில்நுட்பப் பிரிவு

### 1.5.4.1 பொறியியல் சேவைகள ் பிரிவு

நிர்மாணிப்புக் கருத்திட்டங்களுக்கு நியாயமான மற்றும் தாங்கிகொள்ளக் கூடிய விலைகளை நிர்ணயிப்பதன் மூலம் ஒடடு மொத்த நிர்மாணிப்புக் கைத்தொழிலின் மொத்த நிர்மாணிப்புச் செலவினத்தைக் கடடு ப்படுத்துவது மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு வெளிப்படைத் தன்மை மிக்க நியாயமான விலைகளுக்கமைய ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுக்க உதவுவதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**பொறியியல் சேவைகள் பிரிவின் பிரதான பணிகள்**

1. அரசாங்க நிறுவனங்களின் நிர்மாணிப்பு சம்பந்தமான நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொடுத்தல்.
2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் பெறுகை குழுக்களை நியமனம் செய்தல்.
3. ஒப்பந்த வித்தியாசங்களுக்கு அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தல்.
4. அமைச்சின் பெறுகை குழுவின் தீர்மானங்களைப் பெற்றுக்கொடுத்தல்.
5. ஒப்பந்ததாரர்கள ் சம்பந்தமான நிர்மாணிப்புத் துறைக்குரிய தரவுக் கடட மைப்பு மற்றும் நிர்மாணிப்புத் துறை சம்பந்தமான விலைகள் பற்றிய தரவுக்கட்டமைப்பைப் பேணிவருதல்.

## 1.5.5. நிர்மாணப் பிரிவு

### 1.5.5.1 தொழில்நுட்பப் பிரிவு

நிர்மாணக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கான ஏற்பாடுகளைச் செய்தல், சுற்றாடலுக்கு சாதகமான மற்றும் தரமான நிர்மாணக் கைத்தொழிலை உருவாக்குவதற்கு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிப்படுத்துவது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**தொழில்நுட்ப பிரிவின் முக்கிய பணிகள்**

1. நிர்மாணத் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல்.
2. நிர்மாணத் துறை சம்பந்தமான சட்டவரைவுகள், சட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கைகள்
3. தொழில்நுட்பத் துறையுடன் சம்பந்தப்பட்ட நிர்மாணக் கைத்தொழிலை ஒழுங்குறுத்தல் மற்றும் நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு வழிநடாத்தல்.
4. நிர்மாணத் துறைக்குத் தேவையான ஊழியப்படையணியை ஆயத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளல்.
5. தொழில்வல்லுனர்கள் மற்றும் நிர்மாணக் கலைஞர்களை நிபுணத்துவம் மற்றும் அறிவுமிக்கவர்களாக்குவதற்கு மற்றும் தரமான நிர்மாணிப்பை மேற்கொள்வதற்கு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிப்படுத்தல்.
6. தேவையான சந்தர்ப்பங்களில் அமைச்சரவை விஞ்ஞாபனங்களை சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளல்.

### 1.5.5.2 நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவு

பிரதானமாக நகாப்புறப் பிரதேசங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறுகின்ற மக்கள் மற்றும் ஏனைய மக்களுக்குத் தேவையானவாறு வசிப்பதற்கு ஆற்றல் உள்ள வசதிகளைக் கொண்ட வடீ மைப்புக் கருத்திட்டங்களை நிர்மாணிப்பதை வழிநடாத்தல் மற்றும் நகரக் செயலாற்றுகை அறிக்கை – 2018 (வடீமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு)

குடியிருப்பு அபிவிருத்தியானது இப்பிரிவினால் மேற்கொளள்ப்படுகின்றது.

**நகரக் குடியிருப்பு அபிவிருத்திப் பிரிவின் பிரதான பணிகள்**

1. நகரக் குடியிருப்பு கருத்திடட்ங்களை இனங்காணல் மற்றும் அமுல்படுத்துவதற்கு, உரிய நிறுவனங்களுக்குத் தேவையான

ஒத்துழைப்பை வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்கள்.

3. நகரக் குடியிருப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் முனே னற்றத்தை மீளாய்வு செய்தல்.

## 1.5.6. தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

இந்தப் பிரிவு 1973 இன் 01 ஆம் இலக்க வடீமைப்பு ஆதன உச்சவரம்புச ் சட்டத்தின் கீழ் வழங்கப்படடு ள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுகின்றது. அவ்வாறே, 1972 இன் 7 ஆம் இலக்க வாடகைச் சட்டத்தின் கீழ் பொறுப்பளிக்கப்படடு ள்ள சில பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரதான நோகக்ங்களான வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல், அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட வடீகளின் உரிமையாளாக்ளுக்கு நட்டஈடு வழங்குதல் போன்ற நோகக்ங்களுக்காக இந்தப்பிரிவு செயற்பட்டுவருகிறது.

### தேசிய வடீமைப்பு ஆணையாளர் பிரிவின் பிரதான பணிகள்

1. வாடகைக் குடியிருப்பாளாக் ளுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

2. அரசாங்கத்தினால் சுவகீ ரிக்கப்பட்ட வடீ களின் உரிமையாளாக் ளுக்கு நட்டஈடு வழங்குதல்.

3. பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகள் தொடர்பில் எழுகின்ற சிக்கல்களைத் தீர்த்துவைத்தல்.

## 1.5.7.நிதிப் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்புடையதாகின்ற நோக்கங்களை அடைந்துகொள்ளத் தேவையான நிதி வளம் மற்றும் ஆலோசனையைப் பெற்றுக்கொடுத்தல், மேற்படி வளங்களைப் பயன்மிக்கவாறும், வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி ஆலோசனை வழங்குதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### நிதிப் பிரிவின் பிரதான பணிகள்

1. வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்க நிதி முகாமைத்துவ முறைமையை அமைச்சினுள் அமுல்படுத்தல்.
2. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கான பெறுகை குழுக்களைத் தாபித்தல்.
3. நிதி முகாமைத்துவம், நிதித் திட்டமிடல், வரவு செலவுத்திட்டமிடல், சொத்து முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு, முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கு அறிவுரை மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
4. நிதி அமைச்சுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளைப் பேணிவருதல் மற்றும் அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்ளக்கூடியவாறான நிதி வளங்களை திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொண்டு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளித்தல்.
5. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கு அமைச்சின் நோக்கங்களை அடைந்துகொள்வதை பிரதானமாகக் கொண்டு அந்நிறுவனங்களுடன் கூட்டாக இணைந்து வருடாந்த வரவு செலவுத்திட்டத்தைத் தயார் செய்தல் மற்றும் ஆண்டு முழுவதிலும் வரவு செலவுதிட்டக் கட்டுப்பாட்டுடன் நடவடிக்கை மேற்கொள்ளல்.
6. வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியை செலவிடும் போது உரியவாறு அறிக்கையிடல் மற்றும் மாதாந்த, வருடாந்த நிதி அறிக்கைகளை உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்.

### 1.5.8 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் உத்தேச நோகக் ங்களை யதார்த்தமாக மாற்றியமைத்துக் கொள்வதற்காக சிறந்த நிதி நிருவாகம் மற்றும் முறையான முகாமைத்துவத்தை தாபிக்கச் செயற்படல். அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் நிதி நிருவாகம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்கேற்று அந்த நடவடிகன் ககளை மென்மேலும் முறையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொளவ் தற்காக முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்து உதவுதல்.

#### உளள் கக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான பணிகள்

1. அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிகன் ககளை ஒருங்கிணைப்புச் செய்தல்.

2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சிக்கல்களை குறைத்துக˙ கொள்ள நடவடிகன் க மேற்கொளள்ல்.

3. கணக்காய்வு மற்றும் விசாரணை நடவடிகன் ககளின் மூலம் நிறுவனங்களிலுள்ள சிக்கல்களை குறைத்துக˙கொள்ள உதவுதல்.

4. அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மற்றும் அரச கணக்குகள் பற்றிய குழுவின் சிபாரிசுகள் மற்றும் கடட் ளைகளை அமுல்படுத்துவது தொடர்பில் பின்னாய்வை மேற்கொளள்ல்.

# 1.6அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் (வீடமைபப் மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

### 1.6.1. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

இலங்கையில் ஒவெ வாரு குடும்பத்திற்கும் அடிப்படை வசதிகளைக் கொண்ட பாதுகாப்பான வீ டான்றை உரித்தாகக் ிக் கொடுக்கும் நோகக்த்துடன், தேசிய வட்ீமைப்பு அபிவிருத்தி அதிகார சபை செயற்பட்டு வருகின்றது. குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் வட்ீ மைப்புத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதை ஊக்குவித்தல், வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் பொருளாதார சுபீட்சத்தை அடையச் செய்வதற்காக 1979 இன் 17 ஆம் இலக்க “தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச ் சபை” சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், இன்று வட்ீ மைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் 25 மாவட்டங்களிலும் அலுவலகங்களைக் கொண்டுள்ளதுடன், கொழும்பு நகரின் தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக 2 உப அலுவலகங்களையும் கொண்டுள்ளது

### 1.6.2. நகர குடியிருப்பு அதிகாரசபை

நிலைபேறான நகரக் குடியிருப்புக்களில் பெருமைமிகு வாழ்க்கையை உ நோகக் த்துடன், குறைந்த வசதிகளைக் கொண்ட நகாப்ப்ுற குடியிருப்புக்களைச் சூழ எ

கூட்டாட்சி ஆதனங்களில் வசிக்கின்றவர்களின் பயனக் ள் மற்றும் நலன்புரிக்கு பொருத்தமானவாறு நிர்மாணிப்புகள் மற்றும் மேற்படி ஆதனங்களை முறையாக நிருவகித்தல் மற்றும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை பாதிப்புத் ஆதனங்களைப் பராமரிப்புச் செய்தல் ஆகிய பணிகளை ஒழுங்குறுத்துவதற்காக 2003 இன் 24 ஆம் இலக்க பொதுவசதிகள ் சபை (திருத்தச்) சட்டத்தின் மூலம் ஒழுங்குறுத்தும் அதிகார சபையொன்றாக கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை தாபிக்கப்பட்டது. மேலும் 1982 இன் 45 ஆம் இலக்க, 2003 இன் 39 ஆம் இலக்கச் சட்டங்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இருப்பிடக ் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் நியமங்களை ஒழுங்குறுத்துவதும் இதன் முக்கிய நோகக்மாகும்.

### 1.6.3.ஓ.ன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி

இலங்கையின் ஆதன அபிவிருத்திச ் சந்தையின் முனே ாடி ஆதன அபிவிருத்திக் கம்பனியாக மாற்றியமைக்கும் நோகத்துடன் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிப் பதிவுச ் சட்டத்தின் கீழ் தனியார் கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவு இலக்கம் ீஏ 17667). பின்னர் இது 2007 இன் 07 ஆம் இலக் கம்பனிப் பதிவுச ் சட்டத்திற்கு அமைய மீளப் பதிவு செய்யப்பட்டது. தனியார் கம்பனி என்றவகையில் வினைத்திறனை பிரதானமாகக ் கொண்ட இந்தக் கம்பனி இன்று வட்ீ மைப்புத் துறையில் குறிப்பிடத்தக்களவான மாற்றத்தை ஏற்படுத்தி

## 1.6.4. கட்டிடங்கள் திணைக்களம்

இலங்கையின் ஆதன அபிவிருத்திச ் சந்தையின் முனே ாடி ஆதன அபிவிருத்திக் கம்பனியாக மாற்றியமைக்கும் நோகத்துடன் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிப் பதிவுச ் சட்டத்தின் கீழ்

தனியார் கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (பதிவு இலக்கம் ஏ 17667). பின்னர் இது 2007 இன் 07 ஆம் இலக் கம்பனிப் பதிவுச சட்டத்திற்கு அமைய மீளப் பதிவு செய்யப்பட்டது.

தனியார் கம்பனி என்றவகையில் வினைத்திறனை பிரதானமாகக கொண்ட இந்தக் கம்பனி இன்று வட மைப்புத் துறையில் குறிப்பிடத்தக்களவான மாற்றத்தை ஏற்படுத்தி வடீமைப்புத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

## 1.6.5. கட்டிடங்கள் திணைக்களம்

1849 ஆம் ஆண்டு அரசாங்க வேலைகள் திணைக்களம் ஆக ஆரம்பிகக்பபட்ட கடடிடத் திணைக்களம் 1969 இல் “ஏ” தரத்தைச் சேர்ந்த திணைக்களமொன்றாக தாபிக்கப்பட்டதுடன், அரசாங்க வேலைவகள் திணைக்களம் இல்லாதொழிக்கப்பட்டதை அடுத்து, அரசாங்க கடடிட நிர்மாணத் துறையிலுள்ள ஒரே அதிகார அமைப்பாகவும், ஆலோசனை நிறுவனமாகவும் கருதப்படுகின்றது. மாவட்ட பொறியியல் அலுவலகங்கள் 27 இன் மூலம் நாடு முழுவதிலும் கடடி டக் கலை ாதீ ியாக மற்றும் பொறியியல்சார் நிர்மாணிப்புக்கள், நிர்மாணிப்பு, பராமரிப்புச் செய்தல், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் அரச துறையின் கடடி டங்களை நிர்மாணிப்பதற்காக சிறந்ததொரு சேவையை ஆற்றிவருகின்றது.

## 1.6.6. அரசாங்க தொழிற்சாலை திணைக்களம்

அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இயந்திரப் பொறியியல் துறையில் உலோக மற்றும் தச்சுக் கைத்தொழில்சார்ந்த வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகளை விநியோகிக்கும் பணிகள் மற்றும் இயந்திரப் பொறியியலாளர்களுக்கு வேலைத்தளங்களின் உற்பத்தி மற்றும் வேலைகள் சம்பந்தமான செயன்முறைப் பயிற்சிகளை பெற்றுக் கொடுக்கும் நோகக் த்துடன் அரசாங்க தொழில்சாலை திணைக்களம் செயற்பட்டு வருகின்றது.

## 1.6.7. நிரம்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை

2014 இன் 33 ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் இந்த அதிகார சபை தாபிக்கப்பட்டது. நிர்மாணக் கைத்தொழில் துறையின் நடவடிகன் ககளை ஒழுங்குறுத்தல், பதிவுசெய்தல், முறைப்படுத்தல் மற்றும் தரப்படுத்துவது இந்தச் சட்டத்தின் பிரதான நோகக்ங்களாகும். நிர்மாணக் கைத்தொழிலுக்கான தேசிய சபையொன்றைத் தாபித்தல், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி நிதியத்தைத் தாபித்தல், நிர்மாணக் கைத்தொழில் சம்பந்தமான தொழில் வல்லுநரக் ள், உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் கலைஞர்களின் அபிவிருத்தி மற்றும் நலன்புரிக்கான ஏற்பாடுகளைச் செய்தல், நிர்மாண நடவடிகன் ககள் சம்பந்தமான பிணக்குகளைத் தீர்த்துவைத்தல், நிர்மாணக் கைத்தொழில் துறையில் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான ஏற்பாடுகளை உறுதி செய்தல் போன்ற பணிகளுக்காக அதிகார சபை நடவடிகக்ககளை மேற்கொண்டு வருகின்றது.

## 1.6.8 இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம்

வடீமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் பேணி வரப்படுகின்ற பகுதியளவான அரச நிறுவனமொன்றாகும்.

நிர்மாணிப்புத் துறையின் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், பொறியியல் சேவையை வழங்குதல், நிர்மாணிப்பு இயந்திர சாதனங்களை வழங்குதல், திட்டங்களை வடிவமைத்தல், முனவ்லுவூடட்ப்படட் கொன்க்றீட் அம்சங்களை உற்பத்தி செய்தல், பயிற்சியளித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிகன் ககள் போன்ற பணிகளை இந்நிறுவனம் நிறைவேற்றுகின்றது. 2009 ஆம் ஆண்டு முதல் ஐளுழு 9001:2000 தரசச்ான்றிதழையும், ஐளுழு 14001:2004 சுற்றாடல் முகாமைத்துவச் சான்றிதழையும் பெற்று நிர்மாணத் துறையில் முனே னாடி நிறுவனமொன்றாக செயற்பட்டு வருகின்றது.

### 1.6.9 தேசிய இயந்திர சாதன நிறுவனம்

அரசாங்க நிறுவனங்களுக்கு மண் முங்கால ் இடல் இயந்திரசாதனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தேசிய வடீமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் தேசிய இயந்திரசான நிறுவனம் 1992 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் இயந்திர சாதனப் பிரிவாக தேசிய இயந்திர சாதன நிறுவகம் அதன் கீழ் கொண்டுவரப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் மற்றொரு அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் கீழேயே முகாமைத்துவ சபையின் கீழ் இயங்கிவருகின்றது. வனசீவராசிகள், மிருகக் காட்சிசாலைகள், நீரப்பாசனம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் புகையிரதத் திணைக்களத்தினால் கையளிக்கப்படட் விசேட ஒப்பந்தங்களுடன் தேசிய இயந்திரசாதன நிறுவனமானது, படிப்படியாக முனே னற்றமடைந்து வருகின்றது. அச்சுத் தொழில்வல்லுனர்கள், பயிற்றப்பட்ட ஊழியரக் ள், தொழிலாளர் மட்டத்திலான ஊழியரக் ள் 609 பேரைக் கொண்ட பதவியணியினர் இதில் சேவையாற்றுகின்றனர். மேலும், கனரக இயந்திர சாதனங்களைக் கொண்டதாகவும், நாடு முழுவதிலும் சகல மாவட்டங்களிலும் சேவை வழங்கும் டிப்போக் கடட் மைப்புக்களைக் கொண்டதாகவும், ஒவவொரு மாகாணத்திலும் அமைந்துள்ள சகல வசதிகளையும் கொண்ட இயந்திர வேலைத்தளங்களைக் கொண்டதாகவும் உளள்து.

### 1.6.10 அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்

1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1971 ஒக்டோபர் 01 ஆம் திகதி பொறியியல் நிறுவனமொன்றாகத் தாபிக்கப்பட்டதுடன் தற்போது வட ீ மைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது. முதற்தர பொறியியல் நிறுவனம் என்ற வகையில் பாலங்கள், பெருந்தெருக்கள்,

கடடி டங்கள், சுரங்கப் பாதைகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் போன்றவற்றைத் திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதன் மூலம் இந்த நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பினை வழங்கி வருவதுடன் பாலங்களை நிர்மாணித்தல் தொடர்பில் இலங்கையிலுள்ள முக்கிய நிறுவனமாகவுள்ளது. அவவ் ாறே சுரங்கப் பாதைகளை நிர்மாணிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ள ஒரே இலங்கை நிறுவனமும் இந்தக் கூட்டுத்தாபனமாகும்.

நிர்மாணப் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் இந்தக் கூட்டுத்தாபனம் ஊ1 தரத்தைச் சேர்ந்த நிர்மாணிப்பு நிறுவனமாக பதிவு வழங்கப்படடு ள்ளதுடன் மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்படட் நிர்மாணிப்புச் செயலாற்றுகை பற்றிய விருதையும் பெற்றுள்ளது. ஐளுழு 9001:2008 தரச்சான்றிதழை பெற்றுக் கொண்டுள்ள இக்கூட்டுத்தாபனம் நிர்மாணிப்புகளை உரிய

தரநியமங்களுக்கு அமைவாகவே மேற்கொண்டு வருகின்றது. பொறியியல் பணிகளுக்குத் தேவையான முன ் வலுவூடட் ப்படட் முனப் ூர்த்தி செய்யப்பட்ட கொன்க்றீட ் பாலங்கள், மின் கம்பங்கள், ஏனைய முனப் ூர்த்தி செய்யப்பட்ட அம்சங்ககளயும் உற்பத்தி செய்கின்றது. அத்துடன், வதீ ் அபிவிருத்தி அதிகார சபையின் சகல வதீ ் சமிஞ்கசக ் கடட்மைப்புக்களையும் பராமரித்தல் மற்றும் புதிய கட்டமைப்புக்களை உருவாக்கும் பணிகளையும் கூட்டுத்தாபனம் மேற்கொண்டு வருகின்றது.

### 1.6.11 கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் கடடிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் 1971 ஆம் ஆண்டில் தாபிக்கப்படட்து. இதனையடுத்து 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்கத்திற்கு உரித்தான வர்த்தக நிறுவனங்களை பொதுக் கம்பனிகளாக மாற்றியமைக்கும் சட்டத்தின் கீழ் மற்றும் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள சட்டத்தின் கீழ் 100மூ அரசாங்கத்திற்கு உரித்தான வரையறுக்கப்பட்ட பொறுப்புகளைக் கொண்டு பொதுக் கம்பனியாக இந்தக் கூட்டுத்தாபனம் மாற்றியமைக்கப்படட் து. 2007 ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட இலங்கை கடடிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அலுவலக் ள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. மீண்டும் 2010 ஆம் ஆண்டு மாாச ் மாதம் 2007 இன் கம்பனிகள ் சட்டத்தின் 07 ஆம் இலக்கத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டது.

கடடி டப் பொருட்கள் மற்றும் நிர்மாணிப்பு உபகரணங்களை போடடி த்தன்மைமிக்க விலையில் நாடு முழுவதிலும் வழங்குகின்ற முனே னாடி அரச நிறுவனம் என்ற வகையில் சமுதாயத்தின் நம்பிகக் கயை வென்று, அரச நிறுவனம் என்ற வகையில் சமூகப் பொறுப்பை நிறைவேற்றி வருகின்றது.

### 1.6.12 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

2003 இன் 15 ஆம் இலக்க மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்படட் 1997 இன் 07 ஆம் இலக்க வட ீ மைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரிவின் கீழ் உரிமப்பத்திரம் பெற்ற விசேட வங்கியொன்றாகும். பங்குச் சந்தையில் பட்டியலிடப்படடுள்ள இந்த வங்கியின் சாதாரண பங்குகள் கொழும்பு பங்குச் சந்தைப் பரிமாற்றத்தின் பிரதான அட்டவணையில் பட்டியலிடப்படடுள்ளது. பங்குரிமையாளாக் ளுக்கு பயனக் ளை உச்சளவானதாகத்தல், வாடிகக்கயாளாக்ளுக்கு அவா்களின் தேவைகளை இலக்காகக ் கொண்டு சேவைப ் பங்களிப்பை வழங்குதல் மற்றும் எதிர்பார்ப்புகக் ளை தாண்டிச் சென்று புதுவிதமாக திருப்புதியுறச் செய்வது பிரதான நோக்கமாகும்.

### 1.6.13 நடுத்தர வருமான மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டம்

2016 ஆம் ஆண்டில ் அறிமுகம் செய்யப்பட்ட இந்த நிகழ்சச் ித்திட்டமானது அரச மற்றும் தனியார் துறையில் சம்பளம் பெறுகின்ற நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு சகல வசதிகளையும் கொண்ட ஒரு வட ீ ்டை உரித்தாககிக் கொடுக்கும் நோகக்த்துடன் ஒரு வட ீ ்டை உரித்தாக்கிக ் கொள்ளும் வழிமுறை இல்லாத மற்றும் வடீ இல்லாத அரச அல்லது தனியார் துறையில் சம்பளம் பெறுகின்ற நடுத்தர வருமனம் பெறுவோரான குடும்பங்களுக்கு வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்வதன் மூலம் அவா்களின் சமூக நிலைத்திருத்தல் மற்றும் பொருளாதார சுபீட்சத்தை அடைந்துகொள்ளச் செய்வது இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

# 1.7 வெளிநாட்டு உதவிகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் (வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பிரிவு)

இந்திய அரசின் உதவியின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள 05 அபிவிருத்திக் கருத்திட்டங்கள் இந்த அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றன.

| கருத்திட்டம் | நிதிசார் பெறுமதி | கருத்திட்ட காலஎல்லை. | கருத்திட்ட நோக்கம் |
|---|---|---|---|
| மாதுலுவாவே சோபித நாஹிமிகம கருத்திட் (வளைச்சிய) | ரூ.மி. 300 | 2018-2019 | அநுராதபுரம் மாவட்டத்தின் விளச்சிய பிரதேச செயலாளர் பிரிவின் எலபத்கம கிராம அலுவலர் பிரிவில் 153 வறிய குடும்பங்களுக்கு வீடு வழங்குவது உட்பட அடிப்படை சமூக உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுத்தல் |
| மாதிரிக் கிராமம் கருத்திட்டம் I | ரூ.மி. 300 | 2017-2020 | 600 வறிய குடும்பங்களுக்கு பங்கேட்பு அணுகுமுறை அடிப்படையில் வீடுகளை நிர்மாணித்தில் |
| நாடளாவிய மாதிரிக் கிராமம் கருத்திட்டம் | ரூ.மி. 300 | 2017-2020 | 600 வறிய குடும்பங்களுக்கு பங்கேட்பு அணுகுமுறை அடிப்படையில் வீடுகளை நிர்மாணித்தில் |
| தென் மாகாண மாதி கிராமம் கருத்திட்டம் II | ரூ.மி. 300 | 2019-2022 | 600 வறிய குடும்பங்களுக்கு பங்கேட்பு அணுகுமுறை அடிப்படையில் வீடுகளை நிர்மாணித்தில் |
| வட மாகாண மாதிரி கிராமம் கருத்திட்டம் | ரூ.மி. 300 | 2019-2022 | 600 வறிய குடும்பங்களுக்கு பங்கேட்பு அணுகுமுறை அடிப்படையில் வீடுகளை நிர்மாணித்தில் |

# அத்தியாயம் 2
# 2019 முன்னேற்றம் மற்றும் 2020 எதிர்கால நோக்கு (பிரிவு அடிப்படையில்) (வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரிவு)

## 2.1 நிருவாகப் பிரிவு

### ❖ அமைச்சின் பதவியணி

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சுக்கு 2019 ஆம் ஆண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஒட்டுமொத்த பதவியணி 198 பேர் ஆகும் என்பதுடன், நாடளாவிய சேவைகளின் விசேட தரங்களுக்கு புதிய பதவிகளை ஏற்படுத்தல் எனும் தலைப்பைக் கொண்ட அவி.12/15/42/504/142-viii மற்றும் 2017/10/4 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய இந்த அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட இலங்கை பொறியியல் சேவை (விசேட தரம்) மற்றும் இலங்கை திட்டமிடல் சேவை (விசேட தரம்) ஆகிய 02 பதவிகளுக்கு 2019 ஆம் ஆண்டில் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு அனுப்பப்பட்டார்கள். இதனை அடுத்து அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த பதவியணி 198 ஆக அதிகரித்தது.

2018 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் இந்த அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட பணிப்பாளர் (காணிகள்) பதவிக்கு 2019 ஆம் ஆண்டில் அலுவலர் ஒருவரை இணைப்புச் செய்துகொள்ள முடிந்ததுடன், சுமார் 02 வருட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்ட கணக்காளர் பதவிக்கும் இலங்கை கணக்காளர் சேவையின் புதிய ஆட்சேர்ப்புக்களின் மூலம் அலுவலர் ஒருவரை இணைப்புச் செய்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

அவ்வாறே முகாமைத்துவ சேவை அலுவலர்களுக்கான பதவி உயர்வுகள் மற்றும் வேறு பதவிகளுக்குச் சென்றதன் காரணமாக அச்சேவையில் வெற்றிடங்கள் ஏற்பட்டதுடன் குறித்த காலப்பகுதிக்குள் பட்டதாரி பயிலுனர்கள் 07 பேரை பயிற்சிக்காக அமைச்சுக்கு இணைப்புச் செய்து கொண்டதன் மூலம் பதவியணித் தேவை முகாமைத்துவம் செய்துகொள்ளப்பட்டது.

பொது நிருவாக அமைச்சின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டு அலுவலக சிற்றூழியர்கள் 06 பேரை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது. 2019.12.31 ஆம் திகதிக்கு அமைச்சின் நிரந்தர பதவியணியின் ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 52 ஆகக் காணப்பட்டது.

### ❖ அமைச்சரவை விஞ்ஞாபனம் மற்றும் பாராளுமன்ற வினாக்கள்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் கொள்ளப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக 2019.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் 47 உம், அமைச்சரவைக் குறிப்புக்கள் 12 உம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் கொள்ளப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் 2019 ஆம் ஆண்டில் பாராளுமன்ற வினாக்கள் 12 சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி சகல வினாக்களுக்கும் விடையளிக்க அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

### ❖ மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் பதில் நடவடிக்கை மேற்கொள்ளல்

இந்த அமைச்சு தொடர்பில் முக்கியமாக மக்களின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது வீடமைப்புத்துறை தொடர்பிலாகும் என்பதுடன் ஊழியர்களின் நிறுவன ரீதியான சிக்கல்கள் மற்றும் தொழில் சங்கங்களின் சிக்கல்கள் தொடர்பிலும் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக சனாதிபதி அலுவலகம், பிரதம அமைச்சரின் அலுவலகம் மற்றும் பொது மனுக் குழு ஊடாகவும் மேற்படி கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

மேற்படி சகல கோரிக்கைகள் தொடர்பிலும் தலையீடு செய்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமைச்சு தாமதிக்காது நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன் தாபன மற்றும் தொழில் சங்க சிக்கல்களுக்கு அமைச்சின் தலைமையில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தி தீர்வுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், கிடைக்கின்ற பதிலுக்கு அமைய விண்ணப்பதாரிகளை அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய 2019 ஆம் ஆண்டில் பொது மக்களின் கோரிக்கைகள் 8245 கிடைத்துள்ளன.

### ❖ பதவியணியை பயிற்றுவித்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

2019 ஆம் ஆண்டில் அமைச்சின் அலுவலவர்களின் விடய ரீதியான புரிந்துணர்வை மென்மேலும் வளர்த்துக் கொள்வதற்காக பல்வேறு அரச மற்றும் பகுதியளவிலான அரச பயிற்சி நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற விடய ரீதியான பயிற்சிப் பாடநெறிகள், நிகழ்ச்சித்திட்டங்களில் அலுவலர்கள் 80 பேரை பங்கேட்கச் செய்ய அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளுக்கு இந்த அமைச்சின் பதவி நிலை தரத்தைச் சேர்ந்த அலுவலர்கள் 07 பேரும், அபிவிருத்தி அலுவலர்கள் 05 பேரும் பங்கேட்கச் செய்யப்பட்டார்கள். மேலும் பயிலுனர்கள் 11 பேருக்கு விடயரீதியான செயன்முறைப் பயிற்சியைப் பெற்றுக் கொடுக்கவும் அமைச்சு இந்த ஆண்டில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## 2.2 திட்டமிடல் பிரிவு

### ❖ வருடாந்த செயற்றிட்டம்

ஒவ்வொரு வருடமும் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பிலான செயற்பாடுகள் மற்றும் மதிப்பீடுகளை உட்புகுத்தி வருடாந்த செயற்றிட்டத்தைத் தயார் செய்வதுடன், 2019 ஆம் ஆண்டுக்கும் அமைச்சின் மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களுக்கான வருடாந்த செயற்றிட்டம் தயார் செய்யப்பட்டது.

### ❖ முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

வருடாந்த செயற்றிட்டத்திற்கு அமைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முறையாக அமுல்படுத்துவதை அவதானிப்புச் செய்வது மற்றும் மதிப்பீடு செய்வதற்கு விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சரின் தலைமையில் தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய முன்னேற்ற மீளாய்வுக்கான 34 கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. நிர்மாண தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் ஒழுங்கு செய்யப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை 03 ஆகும். வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறனும், விளைதிறனும் மிக்கவாறு நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுக்க இதன் மூலம் ஆற்றல் கிடைத்தது.

### ❖ முன்னேற்ற அறிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்

தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்திற்கு மாதாந்தம் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் நடவடிக்கைகள் திணைக்களத்திற்கு காலாண்டு அடிப்படையில் 04 முன்னேற்ற அறிக்கைகளையும், சனாதிபதி செயலகம் மற்றும் பிரதம அமைச்சரின் அலுவலகத்திற்கு காலாண்டு அடிப்படையில் பெற்றுக் கொடுக்க வேண்டிய 04 முன்னேற்ற அறிக்கைகளையும், உரிய காலப்பகுதிக்குள் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் நிறுவனங்களின் பெறுபேறுகளின் அடிப்படையிலான மதிப்பீட்டு அறிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், சனாதிபதி செயலணிக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முன்னேற்றம் பற்றிய 03 அறிக்கைகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

### ❖ புதிய கருத்திட்டப் பிரேரணைகள்

இந்த அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களினால் 2019 ஆம் ஆண்டில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சிபாரிசைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறைகள் தொடர்பில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள கருத்திட்டப் பிரேரணைகள் 12 ஐ, திறைசேரியின் நிதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க அமைச்சுக்கு இயலுமாயிற்று. மேற்படி புதிய கருத்திட்டப் பிரேரணைகளின் மூலம் கோரப்பட்ட தொகை ரூ.மி. 60,000 ஆகும்.

### ❖ அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டு உதவியைப் பெற்றுக் கொள்ளல்

2019 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த அமைச்சின் கீழ் வெளிநாட்டு உதவியின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற 5 கருத்திட்டங்கள் காணப்பட்டன. மேற்படி சகல கருத்திட்டங்களுக்கும் நிதி

உதவி வழங்கப்படுவது இந்திய அரசினாலாகும். 2017 ஆம் ஆண்டில் இந்திய அரசினால் ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாதிரிக் கிராமம் என்ற வகையில் 25 மாதிரிக் கிராமங்களில் 600 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 60% ஐ அடையப்பெற்றுள்ளது. இவற்றில் 4 மாதிரிக் கிராமங்கள் 2019 ஆம் ஆண்டிலேயே பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

தென் மாகாணத்தில் 25 மாதிரிக் கிராமங்களை ஆரம்பித்து அதனை மையமாகக் கொண்டு 600 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இரண்டாவது கருத்திட்டம் மந்தகதியில் அமுல்படுத்தப்பட்டு வருவதுடன், இது ஆன 35% முன்னேற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது.

மேற்படி கருத்திட்டங்கள் இரண்டுக்கும் மேலதிகமாக வட மாகாணத்தில் 25 மாதிரிக் கிராமங்களில் 600 வீட்டு அலகுகள் மற்றும் தென் மாகாணத்தில் மேலும் 25 மாதிரிக் கிராமங்களில் 600 வீட்டு அலகுகள் வீதம் நிர்மாணிக்க இந்திய அரசினால் வழங்கப்பட்ட மேலும் இரண்டு கருத்திட்டங்களின் வேலைகளை ஆரம்பிக்கவும் 2019 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இக்கருத்திட்டங்களுக்குத் தேவையான காணிகளை இனங்காண்பது தாமதமடைந்தமை மற்றும் கருத்திட்டங்களை அமுல்படுத்தும் நிறுவனமான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை எதிர்கொண்ட தொழில்நுட்ப அலுவலர்களின் பற்றாக்குறை போன்ற விடயங்கள் இக்கருத்திட்டங்கள் தொடர்பில் மந்தகதியான முன்னேற்றம் ஏற்படக் காரணமாக அமைந்தன.

2018 யூலை மாதம் 21 ஆம் திகதி நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட விலச்சிய பிரதேச செயலாளர் பிரிவின் எலபத்கம சங்கைக்குரிய மாதுலுவாவே சோபித நாஹிமிகம கருத்திட்டத்தின் நிர்மாண ஒப்பந்தக் கம்பனியின் பலவீனங்களின் காரணமாக உரிய காலப்பகுதிக்குள் அதனை பூர்த்தி செய்ய முடியவில்லை. 2019 ஆம் ஆண்டின் இறுதிக்கு மேற்படி கருத்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் ரூ.மி. 28 ஆகும் என்பதுடன், பௌதீக முன்னேற்றம் 30% ஆகும். அதற்கமைய, கருத்திட்ட வழிப்படுத்தல் குழுவினால் ஒப்பந்த உடன்படிக்கை ரத்துச் செய்யப்பட்டு வேறு தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் ஒருவரிடம் நிர்மாணப் பணிகளை கையளிக்குமாறு இந்திய நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தை திருத்தியமைப்பதற்கும், புதிய அமைச்சரவை நியமனம் செய்யப்பட்டுள்ளதனால் சட்டத்தை திருத்தம் செய்ய புதிய அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு சிபாரிசுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசினால் வழங்கப்பட்ட மேற்படி சகல கருத்திட்டங்களிலும் ஒவ்வொரு கருத்திட்டமும் ரூ.மி. 300 ஆன பெறுமதியைக் கொண்டதாக உள்ளன.

## 2.3 வீடமைப்புப் பிரிவு

### ❖ மக்களின் கோரிக்கைகள்

2019 ஆம் ஆண்டில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்ட பொது மக்களின் கோரிக்கைகள் 8245 விடயரீதியான உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு கிடைக்கின்ற பதில்களுக்கு அமைய விண்ணப்பதாரிகளை அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், ‘சனாதிபதியிடம் கூறுங்கள்’ நிகழ்ச்சியின் கீழ் இணையத்தளம் ஊடாக மக்களின் கவலைகள் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக் கொண்டு விரைவில் உரிய நிறுவனத்திடம் சமர்ப்பிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், இதன் கீழ் 390 கோரிக்கைகள் உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### ❖ சட்டங்களைத் திருத்தியமைத்தல்

1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக்கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தை திருத்தியமைப்பது தொடர்பிலான பிரேரணைகள் சட்டவரைஞர் திணைக்களத்திடம் 2017.08.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன், 1973 இன் 10 ஆம் இலக்க கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை சட்டத்திற்காக ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் 2017.07.05 ஆம் திகதிய 2026/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

சட்டத் திருத்தத்திற்கு புதிய அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று சட்ட வரைஞர் 2019.12.16 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவித்திருப்பதனால் அதற்கமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சட்டவரைஞர் அறிவித்திருப்பதனால் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1972 இன் 07 ஆம் இலக்க வீட்டு வாடகை சட்டத்தை திருத்தம் செய்யும் போது சட்ட வரைஞருக்கு 2018.08.14 ஆம் திகதி கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2019.02.12 ஆம் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்தில் கலந்துரையாடல் ஒன்றும் நடாத்தப்பட்டது.

❖ **தகவல் அறியும் சட்டம்**

2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் சட்டத்தின் பிரகாரம் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான 17 விண்ணப்பங்களில் 10 விண்ணப்பங்களுக்குத் தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 07 விண்ணப்பங்கள் தொடர்பில் அவை உரிய நிறுவனங்களிடம் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டதுடன், குறித்த நிறுவனங்கள் எமக்கும் பிரதி சகிதம் உரிய விண்ணப்பதாரிகளுக்கு குறித்த தகவல்களை அனுப்பிவைத்துள்ளன.

❖ **தேசிய வீடமைப்புக் கொள்கையைத் திருத்தம் செய்யும் பணிகள்**

அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைய 2016 அக்டோபர் மாதம் 31 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்ட தொகுப்பாளர் குழுவினால் தேசிய வீடமைப்புக் கொள்கை தயார் செய்யப்பட்டது.

இந்தத் தேசிய வீடமைப்புக் கொள்கையைத் திருத்தம் செய்வதற்கு 2019.01.11 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், 2019.06.23 ஆம் திகதி தேசிய வீடமைப்புத் தின வைபத்தை முன்னிட்டு தேசிய வீடமைப்புக் கொள்கை (2019 சனவரி திருத்தம்) வெளியிட்டு வைக்கப்பட்டது.

❖ **உரித்து அல்லது உரிமையை சாட்டுதல் செய்தல்**

2019 ஆம் அண்டு வீடு/காணி உரிமையாளர்கள் 919 பேருக்கு உறுதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட 8(1) ஆவணம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

❖ **பாராளுமன்ற வினாக்களுக்கான விடைகளைத் தயார் செய்தல்**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தொடர்பில் கௌரவ அமைச்சரிடம் வாய்மூல விடை எதிர்பார்த்து கேட்கப்படும் பாராளுமன்ற வினாக்கள் 11 தொடர்பிலான விடைகள் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

❖ **அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் குறிப்புக்கள்**

26 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் குறிப்புக்கள் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி தீர்மானங்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ **வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.**

**மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டங்களின்** கீழ் கடன் மற்றும் உதவி ஆகிய இரண்டு பிரிவுகளின் அடிப்படையில் மாதிரிக் கிராமம் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

ஆண்டினுள் 2562 மாதிரிக் கிராமங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் 367 கிராமங்கள் பயனாளிகளான மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

யாவருக்கும் புகலிடம் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 32,228 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

**உத்தேச ஹுந்தானை கட்டம் II மற்றும் கட்டம் III அரச மற்றும் தனியார் பங்குடைமை வீடமைப்புக் கருத்திட்டம்** தொடர்பில் நான்கு பேரினால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கங்கவட்ட கோரளே பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் சட்ட மாஅதிபருக்கு எதிராக ஹுந்தானை வீடமைப்புக் கருத்திட்டத்தின் (கட்டம் II மற்றும் கட்டம் III) மூலம் இடம்பெறுமென்ற குற்றச்சாட்டு தொடர்பில் சுற்றாடல் பாதிப்பைத் தடுத்துக் கொள்வதற்கு 2019 ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.

### ❖ சொந்துரு பியச வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு கடன் பெற்றுக் கொடுக்கும் பிரதான தகவுதிறன் ஒன்றான வீட்டின் நிலப்பரப்பை 750 சதுர அடிகள் எனும் வரையறை 1500 சதுர அடிகள் வரை என விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய, 2019.10.18 ஆம் திகதி வரை சமர்ப்பிக்கப்பட்ட கடன் விண்ணப்பங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கையான 28514 வங்கிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டு 14221 விண்ணப்பங்களுக்கு கடன் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

### ❖ வேகந்த தேசிய வீடமைப்பு உத்தேச திட்டம்

மேற்படி வசிப்பாளர்கள் எதிர்நோக்கியிருந்த அச்சுறுத்தலான நிலைமை காரணமாக மேற்படி வசிப்பாளர்களை அவ்விடத்திலிருந்து நீக்குதல் மற்றும் குறித்த சகல குடும்பங்களுக்கும் ஹேனமுல்ல வீடமைப்புத் திட்டத்திலிருந்து 150 வீடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மின்சார இணைப்பு வழங்கப்படாமையினால் அப்பணிகளை மேற்கொள்ள முடியாதுபோயுள்ளது.
இந்த வீடமைப்புத் திட்டத்திற்கு மின்சார இணைப்பைப் பெற்றுக் கொள்வதை துரிதப்படுத்துமாறு கோரி அமைச்சரவை குறிப்பொன்று 2018.10.16 ஆம் திகதி அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அதற்கு அவ்வாண்டில் தீர்மானம் கிடைக்காமை காரணமாக புதிய அமைச்சரின் அங்கீகாரத்துடன் மீண்டும் அமைச்சரவைக் குறிப்பொன்றைச் மசர்ப்பிக்க கௌரவ அமைச்சரின் கைஒப்பத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### ❖ சூரிய கலன் கூரையைக் கொண்ட வீடுகளை நிர்மாணித்தல்

சூரியகலன் கூரையைக் கொண்ட 5000 வீடுகளை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சன்பவர் தனியார் கம்பனியினால் வெளிநாட்டு முதலீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு வீடுகள் இல்லாத வறிய குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற இக்கருத்திட்டத்தின் கீழ் 650 சதுர அடிகளைக் கொண்ட 5000 வீடுகள் இலவசமாக நிர்மாணிக்கப்படுவதுடன், வீடமைப்புக் கருத்திட்டத்தின் கூரையில் 20 கிலோ வோட் மின் உற்பத்தி செய்யக்கூடிய சூரியக்கலன்கள் பொருத்தப்படும். உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் மாதாந்தம் 90 கிலோ வோட் வீட்டு உரிமையாளருக்குக் கிடைப்பதுடன் 20 வருடங்களில் வீட்டின் உரிமையும் உரித்தாகும். இக்கருத்திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பிலான ஆரம்ப பணிகள் மேற்கொள்வதுடன், இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை சட்ட மாஅதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டு குறித்த உடன்படிக்கைக்கு சட்ட மாஅதிபரின் அவதானிப்புக்களைப் பெற்றுக் கொள்ளல்.
மின்சார சபையின் ஆலோசனையின் பேரில் வீட்டு உரிமையாளரும், காணி உரிமையாளரும் மற்றும் இலங்கை மின்சார சபைக்கும் இடையே முத்தரப்பு உடன்படிக்கையை மேலதிக ஆவணமாக தயார் செய்ய முடியுமா என்பது பற்றிய இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு இ.மி.ச. உடன் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டியது எந்த நிறுவனம் என்பதைத் தீர்மானம் செய்தல்.

### ❖ உலக குடியிருப்புத் தினம்

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் முதலாவது திங்கட்கிழமை உலக குடியிருப்புத் தினமாக (World Habitat Day) ஐக்கிய நாடுகள் அமைப்பினால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனிதக் குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் (UN-Habitat)

26 ஆம் சம்மேளனம் 2019 மே மாதம் 27 முதல் 31 வரை கென்யாவின் நைரோபி நகரில் நடைபெற்றது. ஐக்கிய நாடுகளின் மனிதக் குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் இலங்கை முகவராண்மை நிறுவனமான நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டார்கள்.

2019 ஆம் ஆண்டின் உலகக் குடியிருப்புத் தின நிகழ்வுகள் "Frontier Technologies as an innovative tool to transform waste to wealth" (நவீன தொழில்நுட்ப திறன்களை புதிய அணுகுமுறைகளாகக் கொண்டு கழிவுப்பொருட்களை செல்வமாக மாற்றிக்கொள்ளல்) எனும் தொனிப்பொருளுக்கு அமைய பத்தரமுல்லை பெலவத்த அபேகம வளவில் 'ஜனகலா அரங்கில்' இதன் பிரதான வைபவம் நடைபெற்றது.

இதனை முன்னிட்டு 2019.10.01 முதல் 2019.10.07 ஆம் திகதி வரையான குடியிருப்பு வாரத்தினுள் கழிவுப்பொருட்கள் மூலம் மேற்கொள்ளக்கூடிய புத்தாக்க உற்பத்திகளை மேம்படுத்தல் மற்றும் அது பற்றி பொது மக்களை விழிப்புணர்வூட்டுவதற்கான முன்னெடுப்பை ஆரம்பித்தல், சிறுவர் சித்திரம் மற்றும் கட்டுரை போட்டிகள், தொழில்முயற்சிகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள், உலகக் குடியிருப்புத் தின நினைவு மலரை தயார் செய்தல், கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றி மக்களை விழிப்புணர்வூட்டல் மற்றும் கூட்டாட்சி முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களைத் தாபித்தல், சமுதாய குடியிருப்புக் குழு உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டல், மாதிரிக் கிராமங்களை மக்களிடம் கையளித்தல் மற்றும் மக்களிடம் கையளிக்கப்பட்ட மாதிரிக் கிராமங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள், கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது எதிர்கொள்ளும் சிக்கல்கள் பற்றி ஆலோசனை (Building Clinic), 'சத்தியக்சனய' வானொலி நிகழ்ச்சியை நடாத்தல், சம்பத் பியச கருத்திட்டத்தைக் கையளித்தல், மாதிரிக் கிராமங்களில் சிரமதான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் சனாதிபதி செயலணியுடன் இணைந்து அமுல்படுத்தப்படுகின்ற மரம் நடுகை, சுற்றாடல் பாதுகாப்பு, போதைப்பொருளை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், நாட்பட்ட சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் உட்பட பல்வேறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

### ❖ கிராமிய வீடமைப்புக் குழுக்களைத் தாபித்தல்

நாடு முழுவதிலும் அமைந்துள்ள 14023 கிராம அலுவலர் பிரிவுகளில் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 11192 கிராம அலுவலர் பிரிவுகளில் கிராமிய வீடமைப்புக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

கிராம அலுவலர் பிரிவு மட்டத்திற்கும் அப்பால் சென்று குழுக்களின் செயற்பாட்டு மட்டத்தை விஸ்தரிக்கும் வகையில் கிராமிய வீடமைப்புக் குழுக்களை சமுதாய குடியிருப்புக் குழுக்கள் எனப் பெயரிடல் மற்றும் நாட்டிலுள்ள ஒவ்வொரு உப கிராமத்திலும் ஒரு குழு வீதம் தாபித்தல்.

### ❖ தகவல் அறிவும் உரிமை பற்றிய சட்டத்தின் கீழ் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்

2016 இன் 12 ஆம் இலக்க மேற்படி சட்டத்திற்கு அமைய அமைச்சுக்கு கிடைத்திருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை இருபத்து நான்கு ஆகும் (24). மேற்படி விண்ணப்பங்களில் இரண்டு (02) இந்த அமைச்சின் விடயப்பரப்புக்கு ஏற்புடையவையாக இருக்காமையினால் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், ஏனைய விண்ணப்பங்கள் தொடர்பிலான தகவல்கள் அமைச்சினால் மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களிடம் பெற்றுக் கொள்ளப்பட்டு உரிய ஆட்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டன.

### ❖ செவண நிதியம்

செவண உதவி பெற்றுக் கொடுக்கும் போது சம்பந்தப்பட்ட உதவிபெறுவோர் தொடர்பில் மற்றும் கருத்திட்டப் பிரேரணைகள் ஆரம்ப வெளிக்கள பரிசோதனையின் பின்னர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சிபாரிசுகளுடன், செவண நிருவாக சபையிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மேற்படி கோரிக்கைகள் தவிசாளர் உள்ளிட்ட செவண

நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இதன் போது 04 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பயனாளிகள் 5708 பேருக்கு ரூ.மி. 579.192 ஆன தொகை அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், 2019.12.31 ஆம் திகதிவரை ரூ.மி. 374.547 ஆன தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

மேலும் செவண லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் வெற்றிபெறுவோருக்கு சுப்பர் பரிசாக 03 வீடுகளைப் பெற்றுக் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

❖ **நடுத்தர வகுப்பைச் சேர்ந்த வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி**

நடுத்தர வகுப்பைச் சேர்ந்த வீடமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்திக்கான துரித நிகழ்ச்சித்திட்டங்களின் ஒருங்கிணைப்பு அலகுடன் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளல்.

இதுவரை 02 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பொது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

- அத்துருகிரிய – கிறீன் வெலி
- ஹோமாகம – மவுன்ட் கிளிபர்ட்

தற்போது 02 கருத்திட்டப் பணிகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- வாத்துவ – சீபீரீஸ்
- ராகம – லாவன்யா ஹைட்ஸ்

## 2.4 நிர்மாண தொழில்நுட்பப் பிரிவு

நிர்மாணக் கைத்தொழில் தொடர்பிலான தொழில்வல்லுனர் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற சகல சட்டவரைவுகள் தொடர்பிலும் சட்ட வரைஞர் திணைக்களத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் யாப்புரீதியான அந்தஸ்தினை சட்ட மாஅதிபர் திணைக்களம் ஊடாக உறுதி செய்துகொண்ட பின்னர் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன. இதற்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்தது.

இலங்கை கட்டிடங்கள் சேவைகள் பொறியியல் தொழில்நுட்ப நிறுவகத்தை கூட்டிணைப்பது தொடர்பிலான சட்ட வரைவு தொடர்பிலான எமது அமைச்சின் அவதானிப்புக்கள் சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

2019.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பு தொடர்பில் வழங்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தை திருத்தம் செய்வதற்குசட்ட வரைஞரிடம் சமர்ப்பிக்கப்பட்டு திருத்தச் சட்டத்துக்கான அவதானிப்புக்கள் மீண்டும் சட்ட வரைஞரிடம் சமர்ப்பிக்கப்பட்டு திருத்தச் சட்டத்திற்கு அவதானிப்புக்கள் மீண்டும் சட்ட வரைஞர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன.

நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பிலான 10 கட்டளைகள் மற்றும் 04 விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் 05 கட்டளைகள் மற்றும் 02 விதிகள் கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 01 கட்டளை மற்றும் 03 விதிகள் சட்ட வரைஞரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சின் கீழுள்ள நிர்மாண கைத்தொழில் தொடர்பிலான நிறுவனமான கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை, கட்டிடங்கள் திணைக்களம், அரசாங்க தொழில்சாலைகள் திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்களும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. அதற்கமைய சகல நிறுவனங்கள் தொடர்பிலும் தனித்தனியாக நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களின் எண்ணிக்கை 23 ஆகும் என்பதுடன், சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை 09 ஆகும்.

## 2.5- நிர்மாணப் பிரிவு

பிரதானமாக அரச பொறியியல் கூட்டுத்தாபனம், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், தேசிய இயந்திரசாதனங்கள் நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாண நடவடிக்கைகளை அமைச்சு மட்டத்தில் ஒருங்கிணைப்புச் செய்தல் இப்பிரிவுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பிரதான செயற்பணியாகும்.

நிர்மாணிப்பை உரிய நிறுவனம் ஊடாக அமுல்படுத்தும் போது அந்நடவடிக்கைகளுக்கு அமைச்சு மட்டத்தில் ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், அந்நிர்மாணிப்பு நாட்டுக்குப் பயன்வாய்ந்ததாக மற்றும் அந்நிறுவனங்களின் அபிவிருத்திக்கு ஏற்புடையதாகின்றவாறு பேணிவருவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் மற்றும் தேவையான கொள்கைசார் தீர்மானங்களை

மேற்கொள்வதற்கு தலையீடு செய்வதும் மேற்கொள்ளப்படும்.

கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் 2019 இன் கீழ் ஹம்பாந்தோட்டை சூரியவெவ தேசிய பாடசாலைக்கான உத்தேச நீச்சல் தடாகத்தை நிர்மாணித்தல், தெபரவெவ தேசிய பாடசாலையின் பிள்ளைகளுக்கு நீச்சல் தடாகத்தை நிர்மாணித்தல் மற்றும் திஸ்ஸமஹாராம இளையுர் விடுதி நிலையத்தை நிர்மாணித்தல் போன்ற பணிகளை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய இயந்திரசாதன நிறுவனம் ஊடாக மேற்கொள்ளல்,

அத்துடன் வரவு செலவுத்திட்ட பிரேரணைகளை அமுல்படுத்துவது 2019 இன் பிரேரணை இலக்கம் 44 இன் கீழ் பஸ் தரிப்பு நிலையம் மற்றும் புகையிரத நிலையங்கள் 16 இன் துப்பரவேட்பாட்டு வசதிகளை மேம்படுத்தல், அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் மூலம் மேற்கொள்ளல்,

2019 ஆம் ஆண்டில் இந்தப் பிரிவின் நேரடி வழிகாட்டலின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பாரிய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## 2.6. நகரக் குடியிருப்புப் பிரிவு

பிரதானமாக நகர்புறப் பிரதேசங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறுகின்ற மக்கள் மற்றும் ஏனைய மக்களுக்குத் தேவையானவாறு வசிப்பதற்கு ஆற்றல் உள்ள வசதிகளைக் கொண்ட வீடமைப்புக் கருத்திட்டங்களை நிர்மாணிப்பதை வழிநடாத்தல் மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தியானது இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

நகரக் குடியிருப்பு கருத்திடட்ங்களை இனங்காணல் மற்றும் அமுல்படுத்துவதற்கு, உரிய நிறுவனங்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நகரக் குடியிருப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வது இதன் பிரதான செயற்பணியாகும்.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டங்களுக்கான தொழில்நுட்ப நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைப்புக்கான கூட்டங்களை நடாத்தல், நடுத்தர வருமானம் பெறுவோருக்கான துரித வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்ற நகர்ப்புற வீடமைப்புக் கருத்திட்டங்களின் தொழில்நுட்ப நடவடிக்கைகளின் போது அமைச்சு தொடர்பிலான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும், இந்த அமைச்சுக்கு உரித்தான நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கருத்திட்டப் பிரேரணைகளை நிலையான கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுவிடம் சமர்ப்பித்து அதன் சிபாரிசுகளுக்கு அமைய தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக திட்டமிடல் பிரிவிடம் சமர்ப்பிப்பதும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டில் இவ்வாறு 07 கருத்திட்டப் பிரேரணைகள் சிபாரிசு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

## 2.7- பொறியியல் சேவைகள் பிரிவு

அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய கையளிக்கப்படுகின்ற நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பிலான விலைமனுக்களை மதிப்பீடு செய்வது அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நிலையான தொழில்நுட்பக் குழுவினால் (STC) மேற்கொள்ளப்படும்
அதற்கமைய, 2019-12-31 ஆம் திகதிக்கு 122 கருத்திட்டங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மனுக்களுக்கு குழுவின் மேற்பார்வையின் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதன் போது உரிய நிறுவனங்களினால் கோரப்பட்ட ரூ.மி. 7478.16 இற்குப் பதிலாக ரூ.மி. 6615.92 இற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு அரசுக்கு மீதப்படுத்தப்பட்ட தொகை ரூ.மி. 862.23 ஆகும்.
கருத்திட்ட ஒப்பந்தப் பணிகள் 05 தொடர்பான மேன்முறையீடுகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் அமைச்சு மட்டத்திலான பெறுகை குழுவினால் (MPC) அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை 02 ஆகும்.
தற்போது அமுலில் உள்ள பொறியியல் சேவைகளுக்கு இடையே அமைச்சு மட்டத்திலான பெறுகை குழு தொடர்பிலான (MPC) 01 கருத்திட்டம் அமைச்சரவையினால் நியமனம் செய்யப்பட்ட நிலையான பெறுகை குழு (SCAPC) தொடர்பான 01 கருத்திட்டம்

அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நியமனம் செய்யப்பட்ட கலந்துரையாடல் குழு (CANC) தொடர்பிலான 03 ஒப்பந்தங்கள் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கான 01 ஒப்பந்தம் என்ற வகையில் மொத்தமாக 05 ஒப்பந்தங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒரு சில வீட்டு ஆதனங்கள் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்களின் போது சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் தொடர்பிலான ஆவணங்களை சமர்ப்பிப்பது தாமதாமதல், பிரதேச செயலாளரின் அறிக்கை தாமதமடைதல், ஆவணங்கள், வர்த்தமான அறிவித்தல்கள், நிலவரைபடம் போன்றன இல்லாமை காரணமாக பரீசோதனைகளை நிறைவு செய்ய முடியாமை மற்றும் விலைமதிப்புச் சபை இதுவரை தாபிக்கப்படாமை என்பன நோக்கங்களை அடைந்துகொள்வதிலுள்ள சவால்களாகும் என்பதுடன், முன்னைய தேசிய வீடமைப்பு ஆணையாளரின் காலஎல்லை நிறைவடைந்த பின்னர் தேசிய வீடமைப்பு ஆணையாளர் ஒருவர் இதுபரை நியமனம் செய்யப்படாமையும் மற்றொரு காரணமாகும்.

## 2.8.நிதிப் பிரிவு

2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2019 ஆம் ஆண்டில் அரச கணக்காய்வுப் பிரிவிடமிருந்து 28 கணக்காய்வு வினாக்கள் கிடைக்கப் பெற்றதுடன், இவற்றில் 08 வினாக்களுக்கு விடை அனுப்பப்பட்டுள்ளது.

## 2.9. தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் வாடகை குடியிருப்பாளர்களுக்கு வீட்டு உறுதிகளைப் பெற்றுக் கொடுக்கும் கருத்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் 12 உறுதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. வெளிக்க பரிசோதனைகள் 26 நடாத்தப்பட்டன.

அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு செலுத்துவதும் பாரியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

ஒருசில வீட்டு ஆதனங்கள் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்களின் போது சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்படல், பிரதேச செயலாளரின் அறிக்கைகள் தாமதமடைதல், ஆவணங்கள், வர்த்தமானிப்பத்திரிகை மற்றும் நில வரைபடம் போன்றன காணப்படாமை காரணமாக விசாரணைகளை நிறைவு செய்ய முடியாமை மற்றும் விலைமதிப்புச் சபை இதுவரை தாபிக்கப்படாமை போன்றன நோக்கங்களை நிறைவேற்றிக் கொளவதில் சவாலாக இருந்ததுடன், முன்னைய தேசிய வீடமைப்பு ஆணையாளரின் காலஎல்லை நிறைவடைந்ததன் பின்னர் நிரந்தர தேசிய வீடமைப்பு ஆணையாளர் ஒருவர் இதுவரை நியமனம் செய்யப்படாமையும் மற்றொரு காரணமாகும்.

## 2.10 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

2019 ஆம் ஆண்டுக்கான 06 கணக்காய்வு அறிக்கைகளின் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 2019.12.10 ஆம் திகதியளவில் கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் 04 கூட்டங்களில் 03 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் 04 விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் 03 விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சிக்கல்களை குறைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைக்கின்றது.

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்வு நடவடிக்கைகளை ஒருங்கணைப்புச் செய்வதை தாபித்தல் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் ஊடாக

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் சிக்கல்களை குறைத்துக் கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளது.

விசாரணை நடவடிக்கைகளை வழிப்படுத்துவதற்கு மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பில் அனுபவம்வாய்ந்த பதவியணி இல்லாமை காரணமாக இப்பிரிவின் கடமை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் சிக்கலான நிலைமை ஏற்படுகின்றது.

# 2020 – அவுட்லுக்

## வீட்டுவசதி பிரிவு

- ❖ பச்சை மற்றும் நட்பு நகரங்கள் மற்றும் வாழ்விடங்களை உருவாக்குதல்
- ❖ ஒவ்வொரு குடும்பத்திற்கும் போதுமான வீட்டுவசதி உறுதி
- ❖ விளிம்புநிலை குழுக்கள் மற்றும் சிறப்புத் தேவை மக்களுக்கான வீட்டுவசதி மற்றும் பிற அத்தியாவசிய வசதிகளுக்கான அணுகலை உறுதிசெய்க
- ❖ வீட்டுவசதி மேம்பாட்டிற்கான பல கட்சி கூட்டாண்மைகளை ஊக்குவித்தல்
- ❖ வீட்டுவசதி மூலம் பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12% வரை வீட்டு நிதி சந்தையை உறுதி செய்தல்
- ❖ வீட்டுத் துறைக்கு பொருத்தமான கொள்கை மற்றும் சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துதல்
- ❖ அனைத்து நகர்ப்புறங்களிலும் வாடகை வீடுகள் போதுமான அளவில் வழங்கப்படுவதை உறுதி செய்தல்

## கட்டுமான பிரிவு

- ❖ கட்டுமானத் தொழிலுக்கான சக்திவாய்ந்த கொள்கை மற்றும் சட்ட கட்டமைப்பு
- ❖ வணிக, பொது மற்றும் சேவைத் துறைகளின் கட்டுமான மற்றும் வணிகச் சூழலில் சுகாதார மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளை செயல்படுத்துவதை உறுதி செய்தல்
- ❖ தேசிய பொருளாதாரத்திற்கு கட்டுமானத் துறையின் உகந்த பங்களிப்பை உறுதி செய்தல்.
- ❖ கட்டுமானத் துறையின் பல்வேறு துறைகளில் உள்ளூர் ஒப்பந்தக்காரர்களின் நன்கு வளர்ந்த திறன்
- ❖ நாட்டின் கட்டுமான செலவை தெற்காசிய பிராந்தியத்தின் போட்டி விகிதத்திற்குக் கொண்டுவருதல்
- ❖ கட்டுமானத் தொழில்துறை வளர்ச்சியின் பிரதான நீரோட்டத்தின் நிலைத்தன்மையை உறுதி செய்தல்

# அத்தியாயம் 3

2019 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை.

**நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று**

| வ. செ. திட்டம் (நடப்புஆண்டு) | | குறிப்பு | உண்ணமயான | | |
|---|---|---|---|---|---|
| | | | நடப்புஆண்டு | நடப்புஆண்டு | |
| | வருமானபெறுகைகள் | | | | |
| | வருமான வரி | 1 | - | - | ACA -1 |
| | உள்ளூர் பொருட்கள் | | - | - | |
| | சேவைகளுக்கான வரி | 2 | - | - | |
| | சர்வதேச வர்த்தகம் | | - | - | |
| | மிதமான வரி | 3 | - | - | |
| | வரியில்லா வருமானம் | | - | - | |
| | மற்றும் பிற | 4 | - | - | |
| | மொத்த வருமானப் பெறுகைகள் (அ) | | - | - | |
| | வருமானமல்லாத பெறுகைகள் | | | | |
| | திறைசேரி முற்பணம் | | 12,701,854,000 | 9,261,908,000 | ACA-3 |
| | வைப்புகள் | | | (75,000,000) | ACA-4 |
| | முற்பணக் கணக்குகள் | | 3,069,224 | 2,864,014 | |
| | வேறு பெறுகைகள் | | 12,755,070 | 10,013,128 | ACA-5/5(a) |
| | மொத்த வருமானமல்லாத பெறுகைகள் (ஆ) | | 88,301,357 | 25,544,280 | |
| | மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள் இ= (அ)+(ஆ) | | **12,805,979,651** | **9,225,329,422** | |
| | கழி செலவினம் | | | | |
| | **மீண்டெழும்செலவினம்** | | | | ACA -2 (II) |
| 348,100,000 | வேதனாதிகள், சம்பளங்கள்,பிற ஊழிய நன்மைகள் | 5 | 109,537,546 | 107,509,811 | |
| 123,600,000 | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 6 | 780,320,035 | 113,654,299 | |
| 6,300,000 | உதவு தொகை, மானியம் மற்றும் மாற்றல்கள் | 7 | 228,212,844 | 196,751,032 | |

| | | | | |
|---|---|---|---|---|
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | | - |
| - | ஏனைய மீண்டெழும் செலவினம் | 9 | | - |
| 478,000,000 | **மொத்த மீண்டெழும் செலவினம் (ஈ)** | | **1,118,070,425** | **417,915,142** |
| | | | | |
| | **மூலதனச் செலவினம்** | | | |
| 5,000,000 | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 10 | 4,045,890 | 3,489,580 |
| 106,000,000 | மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்தல் | 11 | 168,454,677 | 13,466,505 |
| 10,635,000,000 | மூலதன மாற்றல்கள் | 12 | 11,127,573,249 | 8,785,426,680 |
| | நிதிச் சொத்துக்களைக் கையகப்படுத்தல் | 13 | - | |
| 1,000,000 | திறன் மேம்பாடு | 14 | 903,033 | 970,311 |
| 558,000,000 | பிற மூலதனச் செலவுகள் | 15 | 396,015,899 | 422,492,887 |
| 11,305,000,000 | **மொத்த மூலதனச் செலவினம் (உ)** | | **11,696,992,748** | **9,225,845,963** |
| | பிரதான பேரட்டுச் செலவுகள் (ஊ) | | 0 | 0 |
| | வைப்புக் கொடுப்பனவு | | 2,822,542 | 3,039,664 |
| | மூலதனக் கொடுப்பனவு | | 12,404,443 | 12,220,530 |
| | மொத்தச் செலவினம் எ=(+உ) | | **15,226,985** | **15,260,194** |
| | மொத்தச் செலவினம் எ=(ஈ+உ+ஊ) | | **12,830,290,158** | **9,659,021,299** |
| 11,783,000,000 | **2019 டிசம்பர் 31 இல் முற்பண மீதி ஏ=(இ-எ)** | | **(24,310,507)** | **(433,691,877)** |
| | | | | |

ACA -2 (II)

ACA-4

5/5(a)

## 3.2 2019 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு நிதி நிலைமை பற்றிய கூற்று

| | குறிப்பு | உண்ணமயான | |
|---|---|---|---|
| | | 2019 நடப்புஆண்டு ரூபா | 2018 முன்னைய ஆண்டு ரூபா |
| **<u>நிதி அல்லாத சொத்துக்கள்</u>**<br>சொத்து பொறித் தொகுதி உபகரணம் | ஏசீஏ 6 | 279,640,560 | 276,442,221 |
| **<u>நிதிச் சொத்துக்கள்</u>**<br>முற்பணக் கணக்குகள் | ஏசீஏ 5∴5(அ) | 25,863,254 | 26,213,881 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | ஏசீஏ 3 | | |
| | | | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **305,503,814** | **302,656,102** |
| | | | |
| **<u>நிகர சொத்து/ பங்கு</u>** | | | |
| நிகர சொத்து, சொத்துப் பொறித் தொகுதி நிகர ஒதுக்கு | | 25,616,572 | 26,213,881 |
| வாடகை பணி முற்பண ஒதுக்கு | **ஏசீஏ-5(ஆ)** | 279,640,560 | 276,442,221 |
| **<u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u>** | | | |
| வைப்புக் கணக்கு | ஏசீஏ 4 | 246,682 | 0 |
| முற்பண மீதி | ஏசீஏ 3 | | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **305,503,814** | **302,656,102** |

மேலே உள்ள ஏ.சி.ஏ. வடிவத்தில் எண் 1 முதல் 6 வரை சமர்ப்பிக்கப்பட்ட விரிவான கணக்கு அறிக்கைகள் மற்றும்……. முதல் ……. வரையான பக்கங்களில் வழங்கப்பட்ட கணக்குகளுக்கான குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிரணைந்த பகுதிகளாகும். இந்த நிதி நிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி மிகவும் பொருத்தமான கணக்கியல் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதிக் கணக்கின் புள்ளி விபரங்ள், தொடர்புடைய கணக்கியல் குறிப்புக்கள் மற்றும் பிற கணக்கியல் தகவல்கள் திறைசேரிக் கணக்குப் புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டுள்ளதுடன் இந்தப் புள்ளி விபரங்களுடன் உடன்படுகின்றன என்பதை நாங்கள் இதன் மூலம் சான்றளிக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| …………………… | …………………… | …………………………… |
| கணக்கீட்டு அலுவலர் | கணக்கீட்டு அலுவலர் | பிரதான நிதி அலுவலா;/ பிரதான கணக்காளர்/பணிப்பாளர் (நிதி) / ஆணையாளர் (நிதி) |
| பெயர்: | பெயர் | பெயர்: |
| பதவி: | பதவி: | திகதி: |
| திகதி: | திகதி: | |

## 3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ – பீ

**2019 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலப்பகுதிக்கான காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று**

| | உண்ணமயான | |
|---|---|---|
| | **நடப்புஆண்டு** ரூபா | முன்னைய ஆண்டு ரூபா |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** மொத்த வரிப் பெறுகைகள் | | |
| கட்டணம்,அபராதம், தண்டப் பணம், உரிமங்கள் | | |
| இலாபம் | | |
| வருமானமல்லாத பெறுகைகள் | 12,790,155,357 | 9,300,329,442 |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்தக் காசுப் பாய்ச்சல் (அ)** | **12,790,155,357** | **9,300,329,442** |
| | | |
| **கழி – காசு செலவிடல்** | | |
| ஆள்சார் வேதனாதிகள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவு | 817,386,813 | 221,164,110 |
| மானியம் மற்றும் மாற்றல்கள் கொடுப்பனவுகள் | 5,312,844 | 196,751,032 |
| பிற செலவினத் தலைப்புகளுக்கான செலவினம் | 375,682,281 | |
| திறைசேரிக்கு செலுத்தப்பட்ட முற்பணம் | | 75,000,000 |
| **தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (ஆ)** | **1,198,381,937** | **492,915,142** |
| | | |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சல் இ= (அ)-(ஆ)** | **11,591,773,41** | **8,807,414,300** |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து செய்யப்பட்ட மொத்த காசு** | | |
| வட்டி | | |
| பங்கிலாபம் | | |
| சொத்து விற்பனை, பௌதீக ஆதன விற்பனை | | |
| கடன் அறவீடுகள் | 1,291,203 | |
| முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு (ஈ) | **1,291,203** | |
| | | |
| **கழி: காசு செலவிடல்** | | |
| பௌதீகச் சொத்து கொள்வனவு அல்லது நிர்மாணம் அல்லது வேறு முதலீடுகளைக் கையகப்படுத்துதல். | 11,583,522,145 | 9,225,845,963 |
| | | |

| | | |
|---|---|---|
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்காகச் செலவிடப்பட்ட மொத்த காசுப் பாய்ச்சல் (உ) | 9,542,477 | |
| முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு (ஊ)= (ஈ)-(உ) | **(11,593,064,622)** | **(9,225,845,963)** |
| | | |
| தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு (எ)= (இ)+(ஊ) | 0 | (418,431,663) |
| | | |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| உள்நாட்டுக் கடன் பெறுகை | | |
| வெளிநாட்டுக் கடன் பெறுகை | | |
| பெறப்பட்ட மானியங்கள் | 2,822,542 | - |
| | | |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மொத்தக் காசு (ஏ) | **2,822,542** | |
| | | |
| **கழி: காசு செலவிடல்** | | |
| உள்நாட்டுக் கடன் பெறுகை மீள் கொடுப்பனவு | | |
| வெளிநாட்டுக் கடன் பெறுகை மீள் கொடுப்பனவு | | |
| வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | **2,822,542** | |
| | | |
| நிதிச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்தக் காசு (ஐ) | **2,822,542** | |
| | | |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய காசு (ஒ)= (ஏ)-(ஐ) | (0) | |
| | | |
| காசில் தேறிய மாற்றம் (ஓ)= (எ)-(ஒ) | **2,822,542** | **(418,431,663)** |
| ஜனவரி 01 அன்று ஆரம்ப காசு மீதி | **-** | **-** |
| | | |
| **டிசம்பர் 31 அன்று இறுதிக் காசு மீதி** | **(0)** | |

## 3.4 நிதிக் கூற்றுக்கான குறிப்புகள

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு % |
| | NO | | | | |

## 3.5 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் %ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 478,000,000 | 1,142,000,000 | 1,118,070,426 | 98 |
| மூலதனம் | 11,305,000,000 | 12,365,000,000 | 11,696,992,748 | 95 |

**3.6 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்.'. திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்.'. மாவட்டச் செயலகம் .'. மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு**

ரூபா

| தொடர் இல. | அமைச்சுக்கள் ,திணைக்களங்களிலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் %ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| | தேசிய கொள்கை அமைச்சகம் | 1. பயிற்சியாளர்களின் ஆட்சேர்ப்பு<br>2. கட்டிடத் திட்டங்களின் கட்டுமானம் (நெமோ மூலம்) | | | 374,216,395 | |
| | ஜனாதிபதி அலுவலகம் | சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டம் | | | 2,226,155 | |
| | ஓய்வூதியதாரர் | | | | 640,154 | |

## 3.7 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா

| ஆதனக் குறியீடு | குறியீட்டு விபரம் | 2019.12.31 திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கைப்படி மீதி | 2019.12.31 திகதிய நிதி நிலைமை அறிக்கைப்படி மீதி | எதிர்காலத்தில் கணக்கிட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு | | | 150,000,000 | |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | | | 2,861,349 | |
| 9153 | காணி | | | | |
| 9154 | அருவமான சொத்துக்கள் | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | | No | |
| 9160 | நடைபெறும் பணிகள் | | | | |
| 9180 | குத்தகைச் சொத்துக்கள் | | | | |

## 3.8 கணக்காளர் நாயகத்தின் அறிக்கை

**பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது கணக்காளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட இறுதிக் கணக்காய்வு அறிக்கையினை ஸ்கான் (SCAN) செய்யப்பட்டு இங்கு இணைக்கப்பட வேண்டும்.

# அத்தியாயம் 4
## செயலாற்றுகைச் சுட்டிடகள்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)

| விசேட சுட்டிகள் | எதிர்பார்த்த பெறுபேறுகளின் விகிதமாக (%) உண்மையாக பூர்த்தி செய்யப்பட்டவை | | |
|---|---|---|---|
| | 100%-90% | 75%-89% | 50%-74% |
| குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதன் கீழ் 31712 வீட்டு அலகுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 12000 வீட்டு அலகுகளின் வேலைகளை பூர்த்தி செய்தல் | | | ✓ |
| பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள 5000 வீடுகளின் வேலைகளை நிறைவு செய்தல் மற்றும் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தொடர்ச்சியான பணிகள் 19006 இன் வேலைகளை பூர்த்தி செய்தல். | | | ✓ |
| வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதன் கீழ் 9523 குடும்பங்களுக்கு வீடுகள் புதிதாக நிர்மாணிப்பது ஆரம்பிக்கப்பட்டு அவற்றில் 8635 வீடுகளின் வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. | | ✓ | |
| பழைய தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்கள் 28 இனை புனரமைப்புச் செய்தல் | | | |
| குடியிருப்புகளின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் 27 பாலங்களை நிர்மாணிக்கும் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் சமுதாய நீர் விநியோகக் கருத்திட்டங்கள் 16 இன் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | | | |
| சம்பத் பியச திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ அலகுகள் 30 ஐ நிர்மாணித்தல் | ✓ | | |
| குறைந்த வருமானம் பெறும் குடியிருப்புக்களை மையமாகக் கொண்டு 6663 குடும்பங்களின் மனித அபிவிருத்திக்கான அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | ✓ | | |
| நிர்மாணக் கைத்தொழில்துறையில் புதிய கலைஞர்கள் 7800 பேரை பயிற்றுவித்து இத்துறைக்கு விடுவித்தல் | | ✓ | |
| சர்வதேச குடியிருப்புத் தின நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கு செய்தல் | | ✓ | |
| மாதாந்தம் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் 12 ஐ நடாத்தல் | | ✓ | |
| கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 ஐ நடாத்தல் | ✓ | | |

குறிப்பு – அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான சுட்டிகள் அவ்வவ் நிறுவனங்களினால் தனித்தனியே சமர்ப்பிக்கப்படுகின்ற செயலாற்றுகை அறிக்கைகள் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

# அத்தியாயம் 5
## நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை (SDG) நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை

## 5.1 இனங்காணப்பட்ட குறித்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| இலக்கு/நோக்கங்கள் | இலக்கு | வெற்றிகளின் சுட்டி | இதுவரை பெற்றுக் கொண்ட வெற்றிகளின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% 49% | 50%-74% | 75%100% |
| அமைச்சுக்கு நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தைத் தயார் செய்தல் | நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தைத் தயார் செய்து அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் | நிலைபேறான அபிவிருத்தி திட்டம் | | * (தற்போது செயற்றிட்டம் தயார் செய்யப்பட்டு வருகின்றது.) | |

### 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள் விரிவாக

நிலைபேறான அபிவிருத்தித் திட்டத்தைத் தயார் செய்வதன் அடிப்படையில் முக்கியமாக கவனத்தில் கொள்ளப்படுகின்ற விடயப்பரப்புக்கள் 6, இலக்குகள் 16 மற்றும் உபாயமுறைகள் 110 இனங்காணப்பட்டுள்ளன. வீடமைப்புத்துறை தொடர்பில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட செயற்றிட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதிலும் நிர்மாணத் துறை தொடர்பிலான மேற்படி பகுதி மாத்திரம் பூர்த்தி செய்யப்படவுள்ளது. நிர்மாணத் துறை தொடர்பிலான செயற்றிட்டத்தைப் பூர்த்தி செய்தவுடன் அவதானிப்புக்கள் மற்றும் ஆலோசனைக்காக நிலைபேறான அபிவிருத்தித் தேசிய பேரவையிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# அத்தியாயம் 6
## மனித வளத் தோற்றப்பாடுகள்

### 6.5 பதவியணி முகாமைத்துவம

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | பதவி வெற்றிடம் (அதிகப்படியான)* |
|---|---|---|---|
| சிரேஸ்ட | 31 | 23 | 08 |
| மூன்றாம் நிலை | 06 | 02 | 04 |
| இரண்டாம் நிலை | 108 | 81 | 27 |
| ஆரம்ப நிலை | 53 | 40 | 13 |
| | **198** | **146** | **52** |

6.2 பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக.

12/04/2017 மற்றும் 12/15/42/504 / 142- viii அமைச்சரவை முடிவின்படி, இந்த அமைச்சகத்திற்கு இரண்டு சிறப்பு தர பதவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அதன்படி, 2019 ஆம் ஆண்டில் இலங்கை பொறியியல் சேவை மற்றும் இலங்கை திட்டமிடல் சேவை (சிறப்பு தர) அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் அமைச்சின் மொத்த ஊழியர்களின் பலம் 198 ஆக உயர்ந்துள்ளது.

இலங்கை பொறியியல் சேவையின் மேற்படி நியமனம் தொடர்பில் பணிப்பாளர் (நிர்மாண தொழில்நுட்பம்), பதவிக்குப் பதிலாக பணிப்பாளர் (நிர்மாணம்) மற்றும் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) என்றும் உதவிப் பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்) இற்குப் பதிலாக உதவிப் பணிப்பாளர் (நிர்மாணம்) மற்றும் உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) என்றும் புதிய பதவிகள் அங்கீகரித்துக் கொள்ளப்படவுள்ளன.

கூடுதலாக, இலங்கை கணக்காளர் சேவைக்கு புதிய ஆட்சேர்ப்பு கிட்டடத்தட்ட இரண்டு ஆண்டுகளாக காலியாக உள்ள கணக்காளர் பதவிக்கு ஒரு அதிகாரியை நியமிக்க முடிந்தது. இரண்டாம் நிலை காலியிடங்களில் பயிற்சிக்காக 07 பட்டதாரி பயிற்சியாளர்களை அமைச்சகத்திற்கு சேர்ப்பதன் மூலம் பணியாளர்கள் தேவைகள் நிர்வகிக்கப்பட்டன. பொது நிர்வாக அமைச்சின் ஒப்புதலுடன் 2019 இல் இரண்டு அலுவலக உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர். 31.12.2011 தேதியின்படி அமைச்சின் நிரந்தர ஊழியர்களில் 52 காலியிடங்கள் உள்ளன.

## 06.3 மனித வள மேம்பாடு

| நிரலின் பெயர் | பயிற்சி பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை | திட்டத்தின் காலம் | மொத்த முதலீடு (Rs'000) | | திட்டத்தின் தன்மை (உள்ளூர் / வெளிநாட்டு) | தயாரிப்பு பற்றிய அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்ளூர் | வெளிநாட்டு | | |
| பொது சேவை ஒழுக்காற்று நடைமுறை | 6 | 1 நாட்கள் | இலவசம் | | உள்ளூர் | |
| பொதுத்துறைக்கான நெறிமுறைகள், மதிப்புகள் மற்றும் தரநிலைகள் | 7 | 1 நாட்கள் | இலவசம் | | உள்ளூர் | |
| புதிய தணிக்கை சட்டம் | 20 | 1 நாட்கள் | இலவசம் | | உள்ளூர் | |
| பொது சேவை அதிகாரிகளுக்கு "பி" கணக்கு தயாரித்தல் | 2 | 1 நாட்கள் | Rs. 10,000/= | | உள்ளூர் | |
| மன அழுத்தமில்லாத தொழிலாளி பற்றிய விரிவுரை | 4 | 1 நாட்கள் | இலவசம் | | உள்ளூர் | |
| மைக்ரோசாஃப்ட் ஆபிஸ் சிறப்பு பயிற்சி | 3 | 8 நாட்கள் | இலவசம் | | உள்ளூர் | |
| அதிகாரப்பூர்வ வங்கி கணக்குகள் மற்றும் காசோலைகள் | 1 | 1 நாட்கள் | Rs.7000/= | | உள்ளூர் | |
| மின் குறியீடு மற்றும் நிதி ஒழுங்குமுறைகள் | 2 | 2 நாட்கள் | Rs.17,000 /= | | உள்ளூர் | |
| சேமிப்பு மேலாண்மை | 1 | 1 நாட்கள் | Rs.3000/= | | உள்ளூர் | |
| பொதுத்துறை அதிகாரிகளுக்கான விழிப்புணர்வு திட்டம் | 2 | 1 நாட்கள் | இலவசம் | | உள்ளூர் | |
| சம்பளம் மற்றும் சம்பள திருத்தம் தயாரித்தல் | 4 | 2 நாட்கள் | Rs.30,000 /= | | உள்ளூர் | |
| போக்குவரத்து மேலாண்மை | 1 | 2 நாட்கள் | Rs.7000/= | | உள்ளூர் | |
| PSC விதிகள் | 6 | 1 நாட்கள் | இலவசம் | | உள்ளூர் | |
| தனிப்பட்ட கோப்புகளின் பராமரிப்பு | 1 | 2 நாட்கள் | Rs.8500/= | | உள்ளூர் | |
| ஓய்வூதியம் தயாரித்தல் | 1 | 1 நாட்கள் | Rs.5000/= | | உள்ளூர் | |
| குறியீடு | 2 | 2 நாட்கள் | Rs.17,000 /= | | உள்ளூர் | |
| SOR பயிற்சி | 3 | 2 நாட்கள் | Rs.25,500 /= | | உள்ளூர் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வெளிநாட்டு விடுப்பு மற்றும் வெளிநாட்டு பயிற்சிக்கான கொடுப்பனவுகள் | 2 | 1 நாட்கள் | Rs.10,000 /= | | உள்ளூர் | |
| குறியீடு | 4 | 2 நாட்கள் | இலவசம் | | உள்ளூர் | |
| KKS பயிற்சி | 2 | 2 நாட்கள் | Rs.17,000 /= | | உள்ளூர் | |
| KKS பயிற்சி | 3 | 1 நாட்கள் | Rs.12,000 /= | | உள்ளூர் | |
| "ஆழமான தரை தளத்தின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்" என்ற கருத்தரங்கு | 2 | 1 நாட்கள் | Rs.13,500 /= | | உள்ளூர் | |
| கான்கிரீட் மற்றும் எஃகு மேம்பாடுகள் குறித்த சிம்போசியம் | 2 | 1 நாட்கள் | Rs.13,500 /= | | உள்ளூர் | |
| கட்டமைக்கப்பட்ட வலுவூட்டப்பட்ட கான்கிரீட் பற்றிய சிம்போசியம் | 2 | 1 நாட்கள் | Rs.8000/= | | உள்ளூர் | |
| ஒப்பந்த மேலாண்மை மற்றும் கொள்முதல் நிர்வாகத்தில் டிப்ளோமா | 1 | 40 நாட்கள் | Rs.100,00 0/= | | உள்ளூர் | |
| பயன்பாட்டு குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதி அமைப்பு குறித்த சர்வதேச திட்டம் | 1 | 8 நாட்கள் | Rs.234,50 0/= & US $ 1104 | | வெளிநாட்டு | |
| வீட்டுவசதி மற்றும் தீர்வு மேம்பாட்டு திட்டத்தின் திறன் மேம்பாடு | 4 | 15 நாட்கள் | 225 Pounds + US $ 2400 | | வெளிநாட்டு | |
| ஐக்கிய நாடுகளின் தீர்வு மாநாட்டின் முதல் அமர்வு | 1 | 5 நாட்கள் | Rs.181,50 0/= +US $ 4395 | | வெளிநாட்டு | |
| திறன் மேம்பாட்டு பயிற்சி | 1 | 7 நாட்கள் | US $ 280 | | வெளிநாட்டு | |
| கூட்டு சங்கங்கள் தொடர்பான சர்வதேச மாநாடு | 1 | | | | வெளிநாட்டு | |
| இலங்கைக்கான உள்கட்டமைப்பு வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் குறித்த 2019 சிம்போசியம் | 2 | 20 நாட்கள் | US $ 1760 | | வெளிநாட்டு | |
| BRCA பணிமனை | 1 | 1 நாட்கள் | | | வெளிநாட்டு | |
| இலங்கைக்கான சாலை மற்றும் சாலை மேம்பாடு குறித்த கருத்தரங்கு | 3 | 22 நாட்கள் | US $ 2640 | | வெளிநாட்டு | |
| வேலை உலகில் பாலின பிரச்சினைகள் | 1 | 19 நாட்கள் | US $ 840 + 75 Pounds | | வெளிநாட்டு | |
| SME க்களுக்கான நிதி அணுகுமுறைகள் மற்றும் உத்திகள் | 1 | 45 நாட்கள் | US $ 1200 | | வெளிநாட்டு | |

# அத்தியாயம் 7
## இணக்கப்பாட்டு அறிக்கை

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது |
|---|---|---|---|---|
| 1 | **பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்) | இணக்கமற்றது | பொருந்தாது | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | இணக்கமற்றது | பொருந்தாது | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | இணக்கமற்றது | பொருந்தாது | |
| 1.6 | ஏனைய | இணக்கமற்றது | பொருந்தாது | |
| 2 | புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி 445) | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்துப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொதுத் திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக் கட்டளைப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.7 | பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.9 | இழப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டைப் புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 03 | நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி.135) | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல.171∴2004 இன் படி அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணக்கமானது | | |
| 4 | **வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்.** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி. (NBD) திணைகளத்தில் உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப்ப பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்துக் கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 6 | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134(2) டி.எம்.ஏ.∴1-2019 படி ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல். | இணக்கமானது | | |
| 6.3 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப் பிரிவு 40 (4)இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 6.4 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதிப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல். | இணக்கமானது | | |
| 7 | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | டி.எம்.ஏ 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்குக் குறைந்தது 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8 | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ அறிக்கை இல.01.∴2017 சொத்துப் பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்ப்படுத்துவதற்கும், | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமானதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட கால கட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.5 | நி.பி.772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது. | இணக்கமானது | | |
| 9 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.3 | வாகனப் பதிவுப் புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி.103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.2016/30 இன் பந்தி 3.1 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | **வங்கி கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கிக் கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செய்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல். | இணக்கமானது | | |
| 11 | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல் | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி. 94 (1)இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணக்கமானது | | |
| 12 | **அரச அலுவலகர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல் | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல். | இணக்கமானது | | |
| 13 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி.571 பிரகாரம் நடடிவக்கை எடுத்தல். | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 14 | **முற்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும். | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 14.4 | மாதந்தோறும் திறைசேரிப் புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 15 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின் படி சேகரிக்கப்பட்ட வருமானத்தினைத் திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும். | இணக்கமற்றது | பொருந்தாது | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். | இணக்கமற்றது | பொருந்தாது | |
| 15.3 | நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையைக் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல். | இணக்கமற்றது | பொருந்தாது | |
| 16 | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல். | இணக்கமானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல். | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 தேதியிடப்பட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல.04.∴2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 17 | **பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல். | இணக்கமானது (03 குழு கூட்டங்கள் நடைபெற்றது) | 4 வது காலாண்டு குழு கூட்டம் 2020-03-05 அன்று திட்டமிடப்பட்டுள்ளது | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொதுக் கருத்துக்கள் ∴ குற்றச் சாட்டுக்களை எளிதாக்குதல். | இணக்கமானது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளைச் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 18 | **பிரஜைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல.05/2008 மற்றும் 05/2018 (i) இன் படி பிரஜைகள் பட்டயம் / பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமானது | | |
| 19 | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல.02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல். | இணக்கமானது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணி நேரப் பயிற்சி ஆண்டிற்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்கமானது | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனித வள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கமானது | | |
| 20 | **கணக்காய்வுப் பந்திகளுக்கான பொறுப்புக்கள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுப் பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல். | இணக்கமானது | | |